விலை சதம் 50 ★ பக்கங்கள்— 8

சுவையானஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ்
றீக்கோ பீடா வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 464

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

சிக்கன சலவைக்கு
மில்க்வைற் 30 சதம்
அரைக்கட்டி சோப் வாங்கி உபயோகியுங்கள்.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பபணம்.

மலர் 19 | புரட்டாசி 16 | ஷவ்வால் 18 | ஞாயிற்றுக்கிழமை | [2—10—77] | இதழ் 232

# நாளைய கூட்டத்தில் இறுதி முடிவுகள்!

## புதிய பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு புதிதாகநியமிக்கப்பட்ட பொலிஸ்அதிபர் திரு. ரண்முத்துவல, பதவி ஏற்பதற்கு முன்னர் நேற்று வண்ணை திருவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தார்.

## கூட்டணி பாராளுமன்ற குழுவினர் கொழும்பில் கூடுகின்றனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசியல் அமைப்புத் திருத்தம் மாவட்டமந்திரிப்பதவிகள் தொடர்பாக கூட்டணி எம்.பிக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதுகுறித்து நாளைமாலை கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழுவினர் கூடி இறுதி முடிவெடுப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடந்த கூட்டணி நடவடிக்கைக் குழுவின் வடமாகாண உறுப்பினர்களின் கூட்டத்தின் பின்னர், எதிர்க்கட்சித்தலைவரும், கூட்டணி செயலதிபருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

திரு. என். ரி. செல்லத்துரை தலைமையில், கூட்டணி நடவடிக்கைக் குழுவின் வடமாகாண உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## கடத்தல் காரரின் புதிய நிபந்தனை!

### சில பிரயாணிகளுடன் வேறு இடம் செல்லப்போகிறார்களாம்!

டாக்கா, அக். 1

விமானக்கடத்தல் 'சரித்திரத்தில்' புதியஅத்தியாயத்தை எழுப்பி, உலகில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியஜப்பானிய செம்படையினர் தங்களின் 'கடத்தல் நாடகத்தில்' மற்றுமொரு பயங்கரத்தை இப்பொழுது 'மேடை'யேற்றியுள்ளனர்.

ஜப்பானிய 'டிஸி-8' பிரயாணிகள் விமானத்தை பம்பாயிலிருந்து டாக்காவுக்குத் திசை திருப்பி, இரண்டு தினங்களாக வைத்திருந்து, ஜப்பானிய அரசிடமிருந்து தங்களின் 6 சக கைதிகளையும் 60 லட்சம் டாலர் பணத்தையும் கோரிக்கையாகப் பெற்றுக்கொண்ட கடத்தல்காரர்கள் இப்பொழுது புதிய கோரிக்கையையும் ஒரு நிபந்தனையையும் வெளியிட்டுள்ளனர்.

விமானப் பிரயாணிகளில் 59 பேரை மட்டுமே விடுதலை செய்ய இணக்கம் தெரிவித்திருக்கும் ஜப்பானிய செம்படை கடத்தல்காரர்கள், மிகுதிப் பிரயாணிகளை தங்களது பாதுகாப்புக்காக தங்களுடனேயே அனுப்பவேண்டும் என்றும், குறிப்பிட்ட இடங்களில் இவர்கள் இறக்கிவிடப் படுவார்கள் என்றும் இப்பொழுது அறிவித்துள்ளனர்!

ஆனால் தாங்கள் போகும் இடம் பற்றியோ மிகுதிப் பிரயாணிகள் எங்கெங்கு இறக்கப்படுவார்கள் என்பது பற்றியோ இவர்கள் அறிவிக்கவில்லை! இது, ஜப்பானிய அரசுக்கு மற்றுமொரு தலையிடியைக் கொடுத்திருக்கிறது.

இதற்கிடையே, கைதிகளுடனும் பணத்துடனும் டோக்கியோவிலிருந்து புறப்பட்ட ஜப்பானிய விசேஷ விமானம் இன்று காலை (இலங்கை நேரப்படி) சுமார் பதினொரு மணியளவில் பங்களாதேஷ் தலைநகரான டாக்கா வந்து சேர்ந்தது. கடத்தல்காரர்களும் பிரயாணிகளும் இருக்

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் பயிற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

தோட்டப் பாடசாலைகளிலிருந்து ஆசிரியபயிற்சி நெறியை மேற்கொண்ட ஆசிரியர்கள் மீண்டும் தமது பயிற்சிநெறியைத் தொடங்குவதற்கு, இலங்கை தமிழர் ஆசிரியசங்கம் கல்வியமைச்சின் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப்பிரிவு அதிபரை சந்தித்து அவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி தோட்டப் பாடசாலைகளில் சேவையாற்றி சுமார் இரண்டு ஆண்டுகளாகப் பயிற்சி பெற்றவர்கள் திரும்பவும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்த்துக்கொள்வதற்கு உடனடியாக ஆசிரிய பயிற்சிக்கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (கெ)

## நாளை வரை அவகாசம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ்ஊழியர்கள் தமது இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவத்தை நாளை திங்கட்கிழமை பாதிக்கப்பட்ட தமிழ்ஊழியர்கழகத்திற்கு சமர்ப்பிக்கலாம் என்றும் கழகத்திற்கு இதுவரை 1500க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களது உடமைஇழப்பு, உயிர்ச்சேதம் பற்றிய விசாரணைகளை சழகத்தின் சார்பில் சட்டத்தரணிகள் ஆரம்பித்துள்ளனர். சாட்சியமளிக்க விரும்புபவர்கள் 148, நாவலர் வீதியிலுள்ள கழகப்பணிமனையுடன் தொடர்புகொள்ளலாம். (கெ)

யாழ். ஆஸ்பத்திரியில்

## புற்றுநோய் சிகிச்சை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில், புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சை யாழ்ப்பாண வைத்தியசாலையில் நேற்றையதினம் மகரகம புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவைச்சேர்ந்த வைத்திய கலாநிதி திரு. ராஜாகுக்கால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சிகிச்சை, ஒவ்வொரு மாதத்திலும் முதல்வாரசனிக்கிழமையும் அதேமாதத்தின் மூன்றாம்வார சனிக்கிழமையும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. புற்றுநோயாளர்கள், மகரகம மருத்துவமனைக்குச்சென்று சிகிச்சை பெறுவதில் ஏற்படும் கஷ்டங்களைப் போக்குமுகமாக யாழ். லயன்ஸ் கழகம், ரோட்டரிக் கழகம், ஆஸ்பத்திரி குழுக்கள் ஆகியவை கூட்டாக எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பலனாக வைத்திய கலாநிதி திரு. ராஜாகுக்மாதத்தில் இரு தினங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இவர், முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு சிகிச்சையளிக்க வருவதற்கான விமான டிக்கட்டை, ஆஸ்பத்திரிகுழுத் தலைவர் டாக்டர் பிலிப அனுப்பிவைத்திருந்தார். சிகிச்சைக்காக நேற்று மட்டும் 45 நோயாளர்கள் அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

சிகிச்சை அரம்பிப்பதற்கு முன்னர் நடைபெற்ற வைபவமொன்றில் ஆஸ்பத்திரி குழுத் தலைவர் டாக்டர் பிலிப், லயன்ஸ் கழகத்தலைவர் லயன் டாக்டர் சுப்பிரமணியம், டாக்டர்யோகு பசுபதி, டாக்டர் வி. ரி. பசுபதி ரோட்டரிகழகத்தின் சார்பில் எஸ். கனகரத்தினம்' புற்றுநோயாளர்சங்கத்தின் சார்பில் டாக்டர் டபிள்யு. எப். நத்தோனியல், வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பி. அமரசிங்கம், டாக்டர் பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிகிச்சையை ஆரம்பித்துவைத்தனர்.

டாக்டர் ராஜா குக் நேற்று மாலை மகரகம திரும்பினர். (கெ)

## கனடா தமிழ் ஈழ இயக்கம் கலவரங்கள்பற்றிகண்டனம்

டொரான்டோ, ஒக். 1.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற இனக்கலவரங்களைக் கண்டித்து கனடா தமிழ் ஈழ இயக்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

டொரான்டோ சமூக மண்டபத்தில் நடந்த மேற்படி கழகக் கூட்டம் பற்றிய விபரம் வருமாறு:

இலங்கையில் அண்மையில் நடைபெற்றஇனக்கலவரத்தில் தமிழர்கட்கு எதிராக நடைபெற்ற அநீதி குறித்து கண்டனம் தெரிவிக்குமுகமாக கனடா தமிழ்ஈழ இயக்கம் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை ஒழுங்குசெய்து இருந்தது. டொரான்டோ சமூக மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கலந்துகொண்டனர். மண்டபம் நிறைந்து வழிந்து வெளியிலும் மக்கள் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மிகுந்த பரபரப்பான சூழ்நிலையில் இக் கூட்டம் நடைபெற்றது.

மாலை 5-30க்கு தமிழ்ஈழ தேசியகொடி ஏற்றும் நிகழ்ச்சியுடன் ஆரம்பமான இக் கூட்டத்தில் முதலாவதாக இனக்கலவரத்தில் உயிர்நீத்தவர்களுக்கு இரண்டுநிமிட நேர அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்பின்பு தமிழ்ஈழ தேசியகீதம் இசைக்கப்பட்ட போது இளைஞர்களும் மாணவர்களும் வலதுகை முஷ்டியை உயர்த்தி தமிழ்ஈழ தேசியக் கொடிக்கு தமதுமரியாதையை செலுத்தினர். தமிழ்ஈழ இயக்கத்தின் தலைவர் இனக் கலவரம் பற்றிய விபரங்களை விளக்கியவாறு தமது பேச்சை தொடர்ந்தார்.

அவர் பேசுகையில் "நாம் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பினும், கடல் எம்மை பிரிப்பினும், உணர்வால், உள்ளத்தால் எல்லாவற்றிலும் மேலாக இரத்தத்தால் தமிழர்களாகிய நாம் ஈழத்தமிழர்கள் அங்கு தாக்கப்படும்போது மௌனமாக இருந்துவிடமாட்டோம் என்று குறிப்பிட்டார்.

அவரது பேச்சையடுத்து வொயிஸ் ஒப் அமெரிக்கா, பி. பி. ஸி; றேடியோ ஒஃப் ஒஸ்ட்ரேலியா போன்ற சர்வதேச வானொலிகளில் இனக் கலவரம் பற்றியும், ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பற்றியும் அறிவிக்கப்பட்ட செய்திகள் பதிவு நாடாமூலம் ஒலிபரப்பட்டன. தமிழ் மாணவர் இயக்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு பனம்தும்பு அடிக்கும் மெசினும் தென்னந்தும்பு மெசினும் மோட்டரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லையா, பனம்தும்பு தொழிற்சாலை, பெருங்காடு, புங்குடுதீவு. 7260

சுதுமலை அம்மன்கோவில் தெற்கு வீதியில் மெயின்ரோட் அருகில் நாலு பரப்பு காணியும், அதனுள் அமைந்த 5 அறைகளைக்கொண்ட ஓரளவு முடிந்தநிலையிலுள்ள மாடிவீடு விற்பனைக்கு உண்டு. தி. கைலாசநாதன், பிள்ளையார் கோவில், கல்லடி, மட்டக்களப்பு 7264

கைதடி நுணுவில் கட்டையடி வயிரவர் கோவிலடிக்கு கிட்ட கண்டிரோட்டுக்கு வடக்குப்பக்கமாக ஐந்து பரப்பு வளவுக்காணி விற்பனைக்குண்டு வீடும் கடையும் கட்டலாம் 25-10-77க்கு முன் தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு: முருகேசு கோபாலபிள்ளை, நுணுவில் சந்தி, சாவகச்சேரி. 7235

கார்: 5ஸ்ரீ இசுசு பெலே (Isuzu Beliet) டாக்டரின் சொந்தப் பாவனையில் உன்னத நிலையில் உள்ளது விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க டாக்டர் க. அம்பிகைபாகன், அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம். 7228

பரந்தன் புதுக்குடியிருப்பு ரோட்டில் 16-ம் கட்டைக்கருகாமையில் இல.41. சுதந்திரபுரம் 'சின்னையா கமம்' காய்க்கத் தொடக்கியிருக்கிறது. தொடர்பு: த. சின்னையா. நுணுவில்மேற்கு, சாவகச்சேரி. 7220

வேம்பு, தேக்கு மரத்தாலான 10'×7' விசாலமான புதிய கண்ணாடி அலுமாரிகள், 5 கைத்தறிகள், கோட்டாவுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வ. சிவயோகநாதன், தபாற்கந்தோருக்கு அருகாமையில், மானிப்பாய். 7240

நல்ல நிலைகளிலுள்ள பெரிய கோல் ரேட்டர் ஐஸ்பெட்டி, அவுட்போட் மோட்டர், 6. 6 H.P. ஆங்கில அன்சானி, ஆங்கில வில்லியேஸ் 1 1/2" வாட்டர் பம். 383, நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி சந்தி, யாழ்ப்பாணம். 7283

மின் நேர்-வா- தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகலவித கடதாசிகளும் எழுது கருவிகளும் விற்பனைக்குண்டு. 392, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:695 & 7336 7282

## வாடகைக்கு

கிளிநொச்சியில் வாடகைக்கு வியாபாரஸ்தலம் எவ்விதமான வியாபாரத்துக்கும் தகுந்ததும், முக்கியமான இடத்தில்அமைந்ததுமாகும். தேவையானோர் கடிதமூலம் அல்லது நேரில் பேசிக்கொள்ளவும். வ.பகிரதன், 20/9, வைரவர்கோவில் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 7250

## வைத்தியம்

சிறுநீர் மஞ்சளாகவோ சிவந்தோ நிறம்மாறிப்போனாற் செங்கமாரி, கல்லீரலைப் பாதிக்கும் இந்நோய் முறிவுற்று முதிர்ந்தால் ஆபத்தானது. எந்நிலையிலும் இதனைக் குணப்படுத்தக் கைதேர்ந்தவர். சிறுபிள்ளைகள் வலி திரும்பிவராமற் குணப்படுத்துபவர். காலவியல், தலையியல், கபாலஇடி, கிரந்தி, குட்டம், தொய்வு, குன்மம், மாதவிடாய்க்கால வயிற்றுவலி அற்புதமாகக் குணப்படுத்தப்படும். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வங்களாவடி, வேலணை. 7177

## தேவை

வேப்பம்விதை, ஆமணக்கம் விதை, இலுப்பைவிதை, நிலக்கடலை, எள்ளு, இறப்பர் விதை, பருத்தி விதை தொகையாகவும் சில்லறையாகவும் திருப்தியான விலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும். விலை விபரத்துடன் உடனே தொடர்புகொள்ளவும். பொ(B)பி இண்டஸ்றீஸ், ஆனைக்கோட்டை. 7222

ஆண் மழுப்புவோரும் (Fusers) வேலை பழகுபவர்களும் (Carriers) உடனடியாக தேவை. நேரில் வரவும் யாழ். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7231

கொழும்பிலுள்ள ஒரு பிரபல வர்த்தக கூட்டுத்தாபன நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலும், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள கிளை நிறுவனங்களிலும் கடையாற்ற பில்கிளாக், டைப்பிஸ்ற், சாமான் கட்டுபவர்கள், சமையல்காரர் ஆகியோர் தேவை. முன்னர் வேலைபார்த்தஇடம், தகைமைகள் போன்ற விபரங்களுடன் 05-10-77க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7274, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 7274

பெருந்தொகையான கொட்டைப் பாக்கும், சவுக்கு விதையும் தேவை. விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். வி. அரியரட்ணம், முருகன் இன்டஸ்றீஸ் லிமிட்டட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 7277

யாழ். நகரில் பிரபல்மான ஒரு றேடியோ ஸ்தாபனத்திற்கு றேடியோ ரெக்னிசன்ஸ் தேவைப்படுகின்றது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7280, C/o ஈழநாடு லிமிட்டெட். யாழ்ப்பாணம். 7280

தேவன்ஸ் சீயாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புக்களை தயார் செய்வதற்கு, பெண் பிள்ளைகளும் விற்பனை செய்வதற்கு ஆண்களும் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 7263

தையல்வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும். க. பொன்னுத்துரை, 401, மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணம். 7272

## வகுப்புக்கள்

ஆங்கிலம், எண்கணிதம், கணக்கியல் G. C. E (O/L) N. C. G E. - துரிதமீட்டல் வகுப்புகள் ஆரம்பம்: 3-10-77. சனி, ஞாயிறு வகுப்புகளும் நடைபெறும். கிழமை நாட்களில் காலை 5-8 வரை மாலை 6-9 வரை. விபரங்களுக்கு: R. T. ராஜா, 248, கே. கே. எஸ். வீதி (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம். 7262

யாழ். ஹோமியோபதி வைத்தியக்கல்லூரி இம்மாதம் ஆரம்பமாகவிருக்கிறது. விபரங்களடங்கிய பிரசுரத்திற்கு இரண்டு ரூபா போஸ்டல் ஓடர் அனுப்பவும். Dr. T. பரமசிவம், 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 7276

ஆங்கில பாஷையில் குறுகிய காலத்தில் விசேஷ சித்திபெற விண்ணப்பியுங்கள். 'யோகானந்த இன்ஸ்ரிரியூட்' (புங்கங்குள புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்) 54, விபுலானந்த வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 7247

## மல்லி, சீரகம் கடத்த முயற்சி?

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெடுந்தீவிலிருந்து பங்கீட்டுப் பொருட்களான மல்லி, சீரகம் போன்றவற்றைக் கடத்த முயன்ற நபர் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு நெடுந்தீவு உதவிஅரசாங்க அதிபரும், உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியுமான திரு சொ. அமிர்தலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

உதவிஅரசாங்க அதிபர் இப்பொருட்களை பறிமுதல்செய்ததுடன் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளார். இப்பொருட்களை நெடுந்தீவிலிருந்து கடத்துவதில் 13 வயதுடைய ஒரு சிறுவனே ஈடுபட்டுள்ளான் என விசாரணையிலிருந்து தெரியவருகிறது. இதுபற்றி உதவி அரசாங்க அதிபர் பிரதி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் அறிவித்துள்ளார். (கா)

## அனுதாபம்

வேலணை, வெள்ளி

கடற்றொழில் அமைச்சர் திரு. எஸ் டி. ஜெயசிங்காவின் மறைவுகுறித்து ஊர்காவற்றுறைத் தொகுதி ஐ. தே. கட்சி கடற்றொழிலாளர் சங்கங்கள் ஒன்றுகூடி அனுதாபத் தீர்மானமொன்றை நிறைவேற்றியதுடன் அமைப்பாளர் திரு. ம. அமிர்தலிங்கத்தின் ஊடாக மலர்வளையமொன்றையும் அனுப்பிவைத்தனர். (உ)

யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

மேற்படி சங்கத்தில் சேர்ந்துள்ள வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது.

முடிவு திகதி: 7-10-'77.

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

74/3, அல்பிரட் துரையப்பா வீதி, யாழ்ப்பாணம், 1977-10-1

7284

கரைச்சி கிராமப்பிரதேசம்

## கேள்வி விளம்பரம்

கரைச்சி கிராமப்பிரதேசத்தின் விசேட ஆணையாளரால் இதனடியில் தரப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் வரும் 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12-ந் திகதி காலை 10 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். வைப்புப் பணமாக ரூபா 100-00ம் பத்திரப்பணமாக ரூ. 25-00ம் செலுத்தியதன்பேரில், நிர்வாகத்தினரால் 11-10-77 திகதி பி. ப. 3-00 மணி வரையும் வழங்கப்படவுள்ள உரிய பத்திரத்தில் அனுப்பப்படவேண்டும்.

மேலதிக விபரங்கள் யாவும் காரியாலயநேரத்தில் அறிந்துகொள்ளலாம.

### வேலைவிபரம்

1. முரசுமோட்டை சேத்துக்கண்டி வீதி திருத்தவேலை.
2. உருத்திரபுரம் 8ம் வாய்க்கால் சந்தைவீதி திருத்தவேலை.
3. உருத்திரபுரம் ஆஸ்பத்திரி வீதி திருத்தவேலை.

செ. யோகநாதன்
விசேடஆணையாளர்
கரைச்சி கிராமப்பிரதேசம்,
பரந்தன்.
7279

## தனிப்பட்ட தாக்குதலை தவிர்ப்பீர்

"வண்டமிழர் இன்பவாழ்வு கலைஞராலேயே சாத்தியம்" என்ற தலைப்பில் 'ஈழநாடு' இதழில் வெளியான ஒருகண்ணோட்டம் என்ற சிலோன் சந்திரனின் கட்டுரையை வாசித்தேன். சிலோன் சந்திரனின் அற்புதமான கருத்தை இதுவெளிப்படுத்துகிறது.

ஆயினும் அறிஞர் அண்ணா காலத்தில் திரு. எம். ஜி. ஆர். திரு. கருணாநிதி இருவரையும் தம் தம்பிகளாகவே கருதியிருந்தார். கலைஞரைமட்டும் அவர் தம்பியாகக்கருதவில்லை.

'வள்ளல்' என்ற பெயர் திரு. எம்.ஜி. ஆருக்கு கிடைத்தது அவர் ஏழைகளுக்கு வழங்கிய கொடைகளினால் தான்.

பகுத்தறியும் மக்கள் தான் திரு. எம். ஜி. ஆரையும் ஆட்சியில் ஏற்றியுள்ளனர் இதேமக்கள் தான் கலைஞரையும் அண்ணாவையும் ஆட்சியில் அமர்த்தினர். எனவே சிலோன் சந்திரன் அவர்களே தனிப்பட்ட தாக்குதலை கைவிடுங்கள்.

—பரந்தன் கோவையூர் தரன்

## அகதிகளுக்காக அரிசி வழங்கினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மறவன்புலோ, தனன்கிளப்பு, கைதடி, நாவற்குழி, பொதுமக்கள், பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகளுக்காக தமது ஒரு கிழமை பங்கீட்டு இலவச அரிசியை சேகரித்து அன்பளிப்புச்செய்துள்ளார்கள்.

மூன்று மூடைகள்கொண்ட இவ்வரிசி மறவன்புலோ இந்து இளைஞர் மன்றத்தினரால் சேகரிக்கப்பட்டு கைதடி ஆயுர்வேதக்கல்லூரியில் இருக்கும் அகதிகள் முகாமுக்கு வழங்கப்பட்டது. (கா)

## மீனவருக்கு ஓர் நற்செய்தி!

Perkins

பேர்கின்ஸ் (Perkins)

D 31.52 மீன்பிடி வள்ள டீசல் என்ஜின்கள்

தேவையானோர் உடனே எம்மைத் தொடர்புகொள்ளவும்.

சமுத்திரா ட்ரேட்ஸ் லிமிட்டெட்

23/2, ஸ்டான்லி வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7236 (7271)

## அறிவித்தல்

மட்டுப்படுத்தப்பட்ட புறுடென்சல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட வெலிச்சோர்பிள்ளை வில்லியம் என்பவரது ஆயுட் காப்புறுதிப்பத்திரம் (இல. 5325003) காணமல் போய்விட்டதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பத்திரத்தை கண்டெடுத்தால் அல்லது இதில் ஏதாவது உரிமை கோருவதாயிருந்தால், முகாமையாளர், புறுடென்சல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் த. பெ 360, கொழும்பு 10 என்னும் முகவரிக்கு இன்றிலிருந்து ஓர் மாதகால எல்லைக்குள் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். இதற்குப் பின்னர்இதுசம்பந்தமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

புறுடென்சல் இன்சூரன்ஸ் கம்பனி (லிமிட்டெட்)

டெல்மேஜ் போகிற் அன் கம்பனி(லிமிட்டெட்)

பிரதம பிரதிகர்த்தா. 7269

## காணி—வீடு விற்பனை

குடத்தனை மேற்கில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியும் குடத்தனை அரசினர் கனிஷ்ட பாடசாலைக்கு எதிரிலுள்ள வளவும் வீடும் விற்பனைக்கு இருக்கிறது. நில பரப்பு 12-12 10/32.

குறித்த ஆதனத்துக்குள் கல்வீடு, கிணறு, தென்னைகள், பனைகள், வடலிகள், புளிகள், வேம்புகள் முதலியன உண்டு. விலை ரூபா 18,500/- ஒரு ஏக்கர் தோட்டக்காணியும் உண்டு. விலை ரூபா 4,000/.

வாங்க விரும்புபவர்கள் எவராகிலும் தொடர்புகொள்ளவும்.

திரு. யே. எம். இராசரத்தினம்
செயலாளன்
கிறீன் ஞாபக வைத்தியசாலை
மானிப்பாய் 7254

## தேவை

எமது தொழிற்சாலையில் ஒட்டுநல், பொருத்துநர் (Welder cum Fitter) இயந்திரப்பொருத்துநர் (Marine Fitter) பதவிகளுக்கு தொழிலாளர் தேவை. அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ப ஊதியம் வழங்கப்படும். பத்து அல்லது பதினைந்து வருட அனுபவமுள்ளவர்கள் 8-10-77 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர். 7273

# சுகங்களும் —சுமைகளும்!

வட அளவை. பாலசூரியன்

'டேய் கெதியாய் சூத்திரத்தை வளையுங்கடா!...' கமக்காரர் கந்தையா நீர் இறைக்கும் சூத்திரம் வளைத்துக் கொண்டிருந்த மகனை உரப்பி எழுச்சியூட்டினார்.

''அப்பு சங்கிலி விலகிப் போச்சணை!...''-மகன் கந்தையரிடம் முறையிட்டார்.

அவ்வூரில் இன்னமும் பழமை தழுவிநிற்கும் மிகச் சில கமக்காரர் குடும்பங்களில் கந்தையரின் குடும்பமும் ஒன்று. மின் சக்தியும் எண்ணெயும் எரிபொருளாகக் கையாண்டு வேக இயக்கம் பெறும் நீரிறைக்கும் இயந்திரங்கள் எங்கும் ஆட்சி புரியும் இந்நவீன யுகத்தில் கந்தையரின் குடும்பம் நீர் இறைப்பதற்கு இன்னமும் மாடுபூட்டிக் கிணற்றைச் சுற்றி சுற்றி வளையவரும் வாளிச்சூத்திரத்தை சிறிதளவேனும் கூட அயர்வு சோர்வு இல்லாமல் பல்லாண்டு காலமாகக் கையாண்டுவருகிறது. கந்தையரின் தோட்டக்கிணற்றுக்குப் பொருத்தப்பெற்ற அந்நாளில் இந்த இரட்டை வாளிச்சூத்திரம் ஊருக்குப் புதியதாகக் கிராமத்தை கிணற்றடியில் கூட்டி, ஊர் ஆட்கள் முழுப்பேரையும் விந்தையில் ஆழ்த்திப் பெருமை பெற்றதுதான். அதனால் அதை ஒருக்கால் மீள நினைத்தாலும் 'பழஞ்சலிப்பு' பறந்து ஓடிவிடும்.

வாளிச்சூத்திரம் இழுக்கும் மாடுகள் இரண்டும் எலும்பும் தோலுமாக தோற்றமளிக்கும். பனைமட்டைகொண்டு வரியப்பட்டிருக்கும் வேலியில், பனைமட்டைகள் ஒவ்வொன்றும் தெட்டத்தெளியப் புலப்படுவதுபோல், ஏர்ப்புல மாடுகளின் எலும்பு வரிசையையும் அவற்றின் தடித்த தோல் கவசத்தினூடாகப் புடைத்து நம் கவனத்தை ஈர்க்கும். கந்தையாவின் கைக்கு இந்நாள் வரை வந்துபோன மாடுகள் பல. அநேகமாய் எல்லாவற்றிற்கும் இதே கதிதான்.

சங்கிலிப் பிசகு பழுதுபார்த்தான பின், சூத்திரம் மீண்டும் இயங்கலாயிற்று. வயிற்றில் குழிவிழ, விலா எலும்புகள் பின்னிப்புடைக்க, மாடிரண்டும் ஒன்றிணைந்து பிரயோகித்த சக்தியிலே ஜோடி வாளிகள் ஒன்றுமாறி ஒன்று ஆழக் கிணற்றினுள் ஆழ்ந்தும் மேலெழுந்தும் தோட்டப்புல வாய்க்காலில் சரிந்து வாய் கவிழ்க்க; நீர் 'சலசல'வெனப் பாய்ந்தோடிற்று.

(2)

வண்டில்கார நாகப்பருடைய மகன்தான் கந்தையா; நாகப்பருடைய வண்டில் சக்கரம் உருண்டோடிய கிராமத்துச்சாலைகள், இன்றுபோல் பேருந்து வாகங்களையோ அல்லது அவற்றிலும் சிறிதாகச் சின்ன உருப்படிகளாக உந்துவிசையெடுத்து தரையில் ஊர்ந்தோடும் நவநவமான மோட்டார் 'பவர்' வாகனங்களையோ கூடக்கண்டிருக்க மாட்டா. பெரும் பகுதியாக பாதசாரிகளாய் நடந்தே சென்றார்கள்.

குழந்தை, மனைவி, பிள்ளைகளுடனும் முட்டை முடிச்சுகளுடனும் நெடுந்தூரப் பயணம் போனவர்கள் வண்டிலேறிச் சென்றார்கள். அந்தமாதிரியாக நிலவிய நடைமுறை பின் மெல்ல மாறி புதுமை புகுந்தது போலத்தான். கமப்புல ஏற்றம் இறைப்பிலும் வாளிச் சூத்திரம் புகுந்தது. தனது முன்னோர் தோட்டம் செய்த இடத்தை எப்படியும் கந்தையர் விட்டுவிடாமல் தொடர்ந்து இன்னமும் அங்கு உழுது பயிரிட்டார்.

இரு பெண்களும் மூன்று ஆண்களுமாக பெற்றோரின் அன்புப் போஷிப்புக்குட்பட்ட ஐந்து பிள்ளைகளைக் கொண்டது கந்தையாவினது குடும்பம்.

(3)

''அப்பு, மாடு விழுந்து படுத்திட்டுது...'' — சூத்திரம் வளைத்த மகன் கந்தையாவிடம் முறையிட்டு நின்றான்.

''சனியன்!... உதை எங்காவது வித்துத் துலைக்கவேணும்?...'' என்று காய்ந்து மொழிந்து கந்தையா மாட்டினருகே சென்றார்.

ஒருவிதமாக அதனை உசுப்பி எழுப்பி செயல்படுத்தி வைத்து அதன்பின் வரப்பு வகுத்து பகுத்து பாத்திகட்டும் தன் வேலையைத் தொடர்ந்தார். மாடுகளின் முதுகெலும்பு அகன்று விரிந்து தோலைப்புடைத்து நின்றது. தடிக்கம்பு முதுகில் 'சளார் சளார்' என இருதடவை பாய்ந்த பிறகுதான் அது அசைந்து நகர்ந்தது.

''இந்தாருங்கோ, இந்த தேநீரைக் குடிச்ச பிறகு உந்த வேலையைப் பாருங்கோ!...'' —பாத்திகட்டிக்கொண்டிருந்த தனது கணவன் முன் தேநீர்க் கேத்தலும் குவளையுமாக நின்றாள் அவர் மனையாள்.

தன்னை மறந்த லயமாக முழுக்கவனம் செலுத்தி வேலையில் ஆழ்ந்து நின்ற கமப்புதல்வர் கந்தையா, அங்கு பிரசன்னமாகிய மனையாளின் அன்பு அழைப்புக்குச் செவி சாய்த்து, நிமிர்ந்து இடுப்பு வலி ஆற சிலவேளை நின்று அதன்பின் அவள் ஏந்திநிற்கும் தேநீர்க்குவளைக்கும் பனங்கட்டிக்கும் கை நீட்டினார்.

தேநீர் இடைவேளை நிமித்தமாக சில வேளை நின்றுபோயிருந்த இறைப்பு மீண்டும் தொடர்ந்து வாய்க்காலிலே தண்ணீர் பாய்ந்தோடிவர கந்தையாவின் கையும் காலும் துரித கதியில் இயங்கலாயின. சுடச்சுட தேநீர் அருந்தியதால் மேனியில் வியர்வை தண்ணீராய்ச் சொட்ட், ஓடி ஓடித் தண்ணீர் மறித்தார். நீர் பாய்ச்சிய ஈரப்பாத்திகளிலும் பயிர்செடிகளிலும் காலை இளங்காற்று தவழ்ந்து இதமாக வீசிற்று.

செல்லம்மா வெங்காயப் பயிர்ப்புலத்தில் மெல்லக் குந்தி களை பிடுங்கலானாள். கைகள் தாம் அசைந்தனவே தவிர சிந்தனை எங்கெல்லாமோ சிறகடித்துப் பறந்தது.

''இஞ்சருங்கோ;...'' கொஞ்லாக அழைத்தாள் செல்லம்மா

''என்ன...'' என்ற கந்தையரின் தொனியில் 'சீற்றம்' தொனித்திருந்தது.

''சீறி விழாமல், நான் சொல்லுறதைக்கேளுங்கோ ... பொன்னையற்றை பெடியளெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டதுகள்...அவையள் மிசின் வாங்கினால், ஏன் நாங்கள் மட்டும் வாங்கக்கூடாது...''

கந்தையர் மனைவியின் கூற்றை அர்த்தபுஷ்டியோடு நோக்கினார்.

''அதுக்கு இப்ப ஏன் அவசரப்படுகிறாய்?...'' 'இல்லை... எங்கன்ர சின்னத்தம்பிப் புரோக்கர், மூத்தபெட்டைக்கு ஒரு சம்பந்தம் கொண்டுவந்தவர், அதுக்காக மிசினை எடுத்து இரண்டாயிரம் கண்டு மிளகாய்வைச்சிட்டு அவளின்ர கலியாணத்தை ஒரு மாதிரி ஒப்பேத்தலாமல்லோ''

''அதெல்லாம் சரி ... மிசின் வாங்க இப்ப காசுக்கு ஆரிடம் போகிறது..''

''எங்கன்ர சிவலையையும் கறுவலையும் வித்துப்போட்டு வாங்கலாம்தானே!...''

''அதை வித்துப்போட்டு மிசின் வாங்க எந்த மூலைக்குக் காணும்...''

காற்றுக்கேற்ப தாளம் போடும் தன் பயிரின் மீது கண்களை மேயவிட்டு அந்த ஆனந்தக்களிப்புடனே மனையாளிடம் பேசினார் கந்தையா.

''மிச்சத்துக்கு என்ர கழுத்தானையும் அடைவுவைப்பம்!...'' என்று கூறிவிட்டு கணவனை ஏறிட்டு நோக்கினாள் செல்லம்மா.

கணவனிடம் கொடுத்து தன்னுடைய கழுத்தானை அடைவு வைப்பதற்கு செல்லம்மாவுக்கு உள்ளூரப்பயமிருந்ததுதான். ஏனெனில் இரண்டு வருடத்துக்கு முன் அந்தமாதிரி நடந்த நிகழ்ச்சி இன்னமும் மனதினுள் புதைந்துகிடந்தது.

மூத்த புதல்வியினது நெஞ்சு நோய்க்காக ஒரு மருந்துவாங்குவதற்கு அவசரமாக இருநூறு ரூபா காசு தேவைப்பட்டது. அதற்காக செல்லம்மா தனது சங்கிலியை அடைவுவைத்து காசு எடுக்கும்படி கணவனிடம் கையளித்தாள்.

சங்கிலியை அடைவுவைக்கச் சென்ற கணவன் நெடுநேரமாகியும் வீடு திரும்பவில்லை. செல்லம்மாவின் மனதில் கவலை குடிகொண்டது.

அப்போது—

யாரோ சிலர் படலை திறந்து வரும் அரவங்கேட்டு செல்லம்மா படலையை உற்று நோக்கினாள்.

பிணம்போல தனது கணவரை சிலர் தாங்கிவருவதைக் கண்டபோது செல்லம்மாவுக்கு தலையில் யாரோ பலமாகச் சம்மட்டி கொண்டு தாக்குவதைப்போன்றிருந்தது. வாயிலிருந்து மதுவாடை... முகத்தில் கிராய்ப்புக்காயங்கள்...இவற்றைக் கொண்டு அவளால் நடந்ததை ஓரளவு உணரமுடிந்தது.

'வீதியில் விழுந்து கிடந்தவர்!' வந்தவர்களில் ஒருவன் கூறினான்.

'குடும்பத்தின் கஷ்டத்தை உணர்ந்தவர். இனிமேலெல்லாம் முன்பு நடந்ததுபோல் அப்படி ஒன்றும் செய்யமாட்டார்' எனத் தனது மனதுக்கு தானே ஆறுதல் கூறினாள்.

''என்ன யோசிச்சுக்கொண்டிருக்கிறாய்...'' கணவரின் குரல். செல்லம்மாவின் செவியை எட்டியபோதுதான் பழைய நினைவுப்படலத்திலிருந்து விடுபட்டு மீண்டாள்.

''இல்லை...மிசின் எடுத்தால் பொன்னையற்றை வெறுந்தரையையும் எடுத்து அதில மிளகாய்க்கண்டு வைக்கலாமென்று யோசிச்சன்...'' என்று மழுப்பினாள் செல்லம்.

(4)

'மாட்டுப்புரோக்கர்' இராசசுந்தரத்தின் வீடு நோக்கி வேகமாக நடந்தார் கந்தையா. அவரது மனதினிலே பற்பல சிந்தனைகள் உருவெடுத்து நடை வேகத்துக்கியைபாய் கொந்தளித்தன.

'மிசின் வாங்கி இரண்டாயிரங்கண்டு மிளகாய்க்கன்று வைச்சால் சும்மாயிருக்கக் காசு வரும்...அதன்பின் நிலவுதான்...' என்ற மன நம்பிக்கை வாய் முணு முணுப்பாக வெளிவந்தது.

இராசசுந்தரத்தின், படலை திறந்து உள் சென்றார் கந்தையா. அப்போது இராசசுந்தரம் வெறுப்போடு நோக்கியதை கந்தையா கவனிக்காமலில்லை.

''இராசு என்ர மாட்டை ஆருக்காவது பார்த்துத்தட்டிவிடன்...'' என்று பணிவுடன் கேட்டு நின்றார் கந்தையா.

''டேய்! கமக்கார கந்தையா... (தோட்டச்செய்கையில் விருத்திபெறுதலினால் கந்தையரை அப்படிக் கேலியாக அழைப்பது வழக்கம்) வாங்கின காசை திருப்பித்தர மாட்டை... இப்ப மாடு விக்கப் போறியோ!...'' — இராசசுந்தரத்தின் கோபத்தை அவ்வமயம் உதிர்ந்த வார்த்தைகள் அளந்து நிறுத்துக்காட்டின.

''இல்லை இராசு, மாட்டை வித்துப்போட்டு, மிசின் வாங்கப்போகிறன்... அதுதான்...'' என்று இழுத்தார் கந்தையா.

''வாங்கின காசைத் திருப்பிக்கொடுக்கமுடியல்ல... மிசின் வாங்கப் போறீரோ... நாளைக்கு பன்ரெண்டு மணிக்கிடையில காசு வைக்காட்டி மாட்டைக் கொண்டுவந்து கட்டிவிடவேண்டும்!'' என்று இராசசுந்தரம் அதிகாரச் சங்கு முழங்கினார்.

''இராசு... கரைசேரப் போறபிள்ளையைக் காப்பாற்ற நீதான் எனக்கு கருணைகாட்டவேண்டும்...'' என்ற கந்தையரது இரப்புக்கும்அந்த இராசசுந்தரம் மனமிரங்கினாரில்லை.

அதன் பின் கந்தையா அங்கிருந்து வெளியேறியதை இராசசுந்தரம்கவனிக்கவில்லை.

'எத்தனை சுகங்கள்!...' என எண்ணிவந்தவர் 'எத்தனை சுமைகள்!...' என எண்ணிக் கவலையற்றவராய் வீதியில் தலையை தொங்கப்போட்டுக் கொண்டு நடந்தார்.

மனைவி தந்திருந்த தாலியை அடைவுவைப்பதற்காக அடைவுகடை நடராசாவின் வீட்டிற்கு கந்தையாவின் கால்கள் நடைபோட்டன.

[7-ம் [பக்கம் பார்க்க]

---

உருவகக் கதை

# அச்சாணி

இரவு விழித்துவிட்டது. அந்தக் காலை வேளையில் உழவர்களின் உற்சாகம் கரை புரண்டோடியது. பச்சைக்கம்பளம் விரித்ததுபோல பரந்து கிடந்த அந்த வயல்வெளியில் தம் உழைப்பைச் சிந்துவதற்காகச் சிலர் நடந்தும் சிலர் மாட்டு வண்டில்களிலும் சென்று கொண்டிருந்தார்கள். மண்ணிலே வியர்வையைச் சிந்தி அதன் விளைவாக பொருட்களை அறுவடைசெய்து உண்பதில்தான் எத்தனை மகிழ்ச்சி... எத்தனை பூரிப்பு. வயலும் வயல் சார்ந்த இடமுமான அந்தக்கிராமத்தில் அதிகாலை வேளையில் அனைவருக்கும் ஆனந்தப்பரவசம் ஏற்பட்டுவிடும். உழைத்து உண்பதால் வரும் ஆனந்தம் அது. கலப்பைகளைத்தோளில் சுமந்தபடி எருதுகளை அழைத்துச் செல்லும் ஆண்கள். கஞ்சிக் கலயம் சுமந்தபடி ஆடிப் பாடிச் செல்லும் பெண்கள். 'தொழில்' பழகச் செல்லும் சிறுவர், சிறுமியர் எங்கு திரும்பிடினும் உற்சாகம் நிறைந்திருந்தது.

கந்தனுடைய ஒற்றை மாட்டு வண்டில் வீதியிலுள்ள குன்றையும் குழியையும் லட்சியம் செய்யாது ஓடிக்கொண்டிருந்தது. வெய்யில் உச்சியில் சூடேற்றும் நிலைக்குமுன் தோட்டத்தை அடைந்துவிட வேண்டும் என்ற அவனது மன வேகம் கையிலுள்ள கம்பைச் சுற்றியது. 'கட...கட' என்ற சத்தத்தையுடைய அதிகரிப்பு வண்டியின் வேக அதிகரிப்பை உணர்த்தியது. மகிழ்ச்சிக் குதூகலிப்பில் கந்தன் பாடத் தொடங்கிவிட்டான் 'வண்டி ஓடச்சக்கரங்கள் இரண்டுமட்டும் வேண்டும். அவன் பாடலைக்கேட்டு வண்டில் சக்கரங்களுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. வண்டில் மாட்டைப் பார்த்து ஏளனச் சிரிப்பை உதிர்த்தன. கற்களில் ஏறி இறங்கி 'கட...கட' என்ற ஓசை எழுப்பின. 'வண்டிலுக்கு முக்கியமானவனே நான்தான்'''' என்றன சக்கரங்கள். மாடு மூசி மூசி வண்டிலை இழுத்தது. 'நானில்லாவிட்டால் உன்னால் அசையவே முடியாதே ...' என்று விட்டு நிமிர்ந்து பார்க்க முயன்றது மாடு. வண்டிலின் பாரத்தால் அதற்குத் தலைநிமிரமுடியவில்லை. சங்கரங்களுக்குப் பலத்த சிரிப்புத்தான் உண்டாகியது.

கந்தனின் கையில் இருந்த கம்பு மாட்டின் மீது 'படார்' என்று விழுந்தது. 'அடியாத மாடு படியாது... கீழ்ப்படியாது என்பதுதான் எவ்வளவு உண்மை, நான் அடிக்காவிட்டால் நீ எங்கே அசையப் போகிறாய்' என்றது. கந்தனின் கையில் இருந்த காட்டுக் கம்பு. சக்கரங்கள் மீண்டும் சிரித்துவிட்டு இரண்டு நாட்களிலேயே முறிந்துவிடும் உனக்கு இத்தனை திமிரா...' என்று ஏளனம் செய்தன மீண்டும் கம்பு 'படார்' என்று மாட்டில் மோதியது. அதற்கு மிகுந்த ஆத்திரம்' சக்கரங்களைப் பார்த்துக் கூறியது 'நீங்கள் முறிந்துவிட்டாலும் அடுப்புக்குப் போகவேண்டியவர்கள்தாதே.'

'எங்கள் பலம் உனக்குத் தெரியாது' என்றுவிட்டுச் சிரித்தன சக்கரங்கள். 'உங்களைச் சுற்றியுள்ள இரும்பு வளையங்களால் ஏற்பட்டதுதான் உங்கள் பலம் அடிமையாக இருந்து பலவானாக இருப்பதைவிட சுதந்திரமாக பலமற்று இருப்பதே மேல்' என்று உறுதியாகக் கூறியது காட்டுக்கம்பு. மீண்டும் படார்'என்று காட்டுக்கம்பு மாட்டின் மீது பலமாக விழுந்தது.

மாடு சிரமத்துடன் வண்டிலை இழுத்துக்கொண்டிருந்தது.

'நானில்லாவிட்டால் வண்டிலே அசையாது' என்பது அதன் கூற்று. வீதியில் கிடந்த கற்களிலும் குன்று குழிகளிலும் விழுந்தெழும்பி 'கட கட...' என்று உருண்டன வண்டில் சக்கரங்கள். 'நாமில்லாவிட்டால் வண்டிலே இல்லை, என்று கூறிக் கொண்டன அவை. 'படார்... படார்' என்று மாட்டின் மீது அடித்தது காட்டுக்கம்பு. 'அடியாத மாடு படியாது'என்பதை நினைத்து அது பெருமை கொண்டது. வண்டிலின் அச்சாணி மட்டும் மௌனமாகவே இருந்தது. 'வண்டி உருண்டோட அச்சாணி தேவை' என்று கந்தன் பாடியதைக் கேட்டும் கூட அதற்கு இறுமாப்பு ஏற்படவில்லை. 'அச்சாணி இல்லாததேர் முச்சாணும் ஓடாது' என்ற முதுமொழியைக்கூட எடுத்துக் கூறவில்லை. மௌனமாகவே தன பணியைச் செய்துகொண்டிருந்தது.

அவசியமானவர்கள் அமைதியாகத்தான் இருப்பார்கள்.

காவலூர்
எஸ். ஜெகநாதன்



ஆவியுலகத் தொடர்பு—7

# மறு உலகைப்பற்றி மக்கள் அறிய ஆரம்பித்தது எப்போது?

மரணத்திற்கு அப்பால் உள்ள வாழ்க்கையை மக்கள் எப்போது உணர்ந்து கொண்டனர்? ஆவியுலகத் தொடர்பின் ஆரம்பம் எப்போது? இவை விடைகாணமுடியாத கேள்விகள். மரணத்தின் பின் ஆன்மா இன்னொரு உடலோடு வெளியேறிவிடுகிறது என்ற உண்மை மிகப் பழங்காலந்தொட்டே மக்களால் நம்பப்பட்டு வருகிறது. எப்போது தோன்றியது என்று விடைசொல்லமுடியாத அளவிற்குத் தொன்மைவாய்ந்த இந்துமதத்தின் முக்கிய கொள்கையே இவ்வுலகம் நிலையற்றது. மறு உலகில் நாம் நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு முயற்சிக்கவேண்டும் என்பதுதான்.

ஆனால் இதை சங்ககாலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் அறிந்திருந்தனர் எனலாம். இறந்தபின் செல்லும் உலகம் ஒன்று உண்டு. இவ்வுலகில் நன்மைசெய்தவர்கள் மறுஉலகில் இன்பம் அனுபவிப்பர். தீமைசெய்தவர்கள் துன்பத்தை அடைவார்கள் என்று நம்பினார்கள் தமிழர்கள். புறநானூற்றின் 134-ம் பாடல் இப் பிறப்பில் செய்த ஒன்று மறுபிறப்பிற்கு உதவும் என்று எண்ணி ஒரு பொருளைக் கொடுத்து அறத்தை விலைக்கு வாங்கும் வணிகன் அல்லன் ஆய் என்பவர் என்று பொருள் தரும்படி எழுதப்பட்டுள்ளது. சுவர்க்கத்தைத் தமிழில் துறக்கம் என்றும் சொல்வர்.

''பெறற்கு அரும் தொல் சீர்த்துறக்கம்'' என்று பட்டினப்பாலையும் பெரும்பாணாற்றுப் படையும் கூறுகின்றன. துன்பம் தருவதை நரகம் என்கிறோம். நரகத்தையே தமக்கு இடமாகக் கொள்கிறவருடன் சேராமல்... என்ற பொருள் தரும்படி புறநானூற்றின் ஐந்தாம் பாடல் வரி ஒன்று உள்ளது.

இன்று உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் பல அறிஞர்களால் பாராட்டப்படுவதும் ஆன பகவத்கீதையில் கிருஷ்ணர் பின்வருமாறு கூறுகிறார். ''ஓ அர்ச்சுனா எனக்கும் உனக்கும் எத்தனையோ ஜன்மங்கள் சென்றுவிட்டன. நீ அதை அறியமாட்டாய்.

''பழுதுபட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதிய வைகளைப் போட்டுக்கொள்வது போல ஆத்மா பழைய உடல்களை நீத்துப் புதியன புகுகிறது''. (2:22)

''ஆயுதங்கள் ஆத்மாவை வெட்டாது. தீ அதை எரிக்காது. நீர் நனைக்காது. காற்றும் அதை உலர்த்தாது: (2:23)

மேற்கண்டவை கீதையின் வாசகங்கள். ஆன்மா வேறு உடல்வேறு என்பதை தமிழனும் உணர்ந்திருந்தான். இந்த உணர்வு தமிழ்மக்களிடம் எந்தக்காலத்தில் பிறந்தது என்று கூறமுடியாது. எழுத்துக்களை உயிர் எழுத்து மெய்எழுத்து என்று பிரித்த காலத்திற்கு முன்பே இந்த உணர்ச்சி பிறந்திருக்கவேண்டும். உயிர் தனித்து இயங்கக்கூடியது. உடல் தனித்து இயங்காது. உயிர்சேர்ந்தால்தான் உடல் இயங்கும். இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டுதான் தனித்து இயங்கும் எழுத்துக்களுக்கு உயிர் எழுத்துக்கள் என்றும் தனித்து இயங்காத எழுத்துக்களுக்கு (உடல் என்னும் பொருளில்) மெய் எழுத்துக்கள் என்றும் உயிர்சேர்ந்தால்தான் உடல் இயங்கும் என்ற பொருளில்

வி. ரவிச்சந்திரன்

உயிர் மெய் எழுத்துக்கள் என்றும் பெயரிட்டுள்ளனர் தமிழர்கள். இந்த உண்மை சிந்திக்கத்தக்கது.

வேதங்களுக்கு அடுத்தபடியாகச் சிறப்புப்பெற்ற உபநிடதங்களில் கூட இதுபற்றிக் கூறப்பட்டுள்ளன. கடோபநிஷதத்தில் நசிகேதஸ் என்ற சிறுவனின் கதை உள்ளது. நசிகேதஸின் தந்தையான கௌதமர் ஒரு யாகம் செய்து கொண்டிருந்தார். நசிகேதஸ் தன் தந்தையிடம் என்னை யாருக்குக் கொடுப்பீர்கள் என்று கேட்க தந்தை உன்னை யமனுக்குக் கொடுப்பேன் என்றார். நசிகேதஸ் எமனின் இல்லத்தை அடைந்து மூன்று தினங்கள் அன்ன ஆகாரமின்றி வாயிலேயே காத்திருந்தான். இதை அறிந்த எமன் அவனுக்கு மூன்று வரங்களைக் கொடுக்கிறான். அதன்படி மூன்றாவது வரமாக மரணத்தின் உண்மையைப்பற்றி எமனிடம் கேட்டு அறிகிறான் நசிகேதஸ்.

மகாபாரதத்திலும் ஆசிரம வாச பர்வத்தில் வியாசமுனிவர் திருதிராஷ்டிரனையும்- காந்தாரியையும்- குந்தியையும் ஒரு சோலைக்கு அழைத்துச் சென்று அங்கே துரியோதனாதியரையும் கர்ணன்-பீஷ்மர்- துரோணர்- கடோற்கசன்- அபிமன்யு - பாண்டவர்கள்- சகுனி சிகண்டி யாவரையும் மறு உலகத்திலிருந்து வரவழைத்துக் காட்டினார் என்றும் சுவர்காரோணபர்வத்தில் தருமர் இந்திரலோகம் சென்று துரியோதனன்- கர்ணன்- அர்ச்சுனன் முதலியோரைக் கண்டபின் வைகுண்டம் சென்று மகாவிஷ்ணுவைத் தரிசனம் செய்தார் என்றும் செய்திகள் உள்ளன.

கம்பராமாயணத்திலும் தசரதர் தான் இறந்த 14 ஆண்டுகள் கழித்து வானுலகில் இருந்து பூமிக்கு வந்து ராமனையும் சீதையையும் ஆசீர்வதித்து இராமனுக்கு வரங்கள் பல அளித்து பிறகு வானுலகம் சென்றதாகச் செய்தி உள்ளது.

இன்னும் இதுபோன்ற பல செய்திகள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், திருவிளையாடல்புராணம், திருக்குறள் முதலிய நூல்களில் உள்ளன. மரணத்தின் பின்னும் வாழ்க்கை உள்ளது என்பதையே அவைகள் உணர்த்துகின்றன.

மேற்கண்டவைகள் இந்து மதத்தின் கொள்கைகள். ஆனால் ஆவியுலக வாழ்க்கையையும் மறுபிறப்பையும் ஒப்புக்கொள்ளாத கிறிஸ்தவர்களின் வேதப் புத்தகமாகிய பைபிளின் பழைய ஏற்பாட்டில் சாமுவேலின் முதலாம் புத்தகம் அதிகாரம் 28-ல் அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீ ஒருத்திமூலம் இழந்துபோன சாமுவேலை அவருடைய மகன் அழைத்துப்பேசியதாகச்செய்தி உள்ளது.

முகமதியர்களின் வேத நூலான திருக்குர்ஆனில்கூட மரணத்தின்பின் உயிர்கள் தாங்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப நன்மை தீமைகளை அனுபவிப்பதாக எழுதியுள்ளனர்.

பண்டைய எகிப்தியர்கள் இந்தத் தேகத்தின் நிழல் போன்ற பிரதிரூபம் இருப்பதாகவும் இந்த உடல் உள்ளமட்டும் அந்த உருவமும் நிலைபெற்றுஇருக்கும் என்றும் நம்பினார்கள் அதன் காரணமாகவே இந்த உடலைப் பாதுகாத்து வைக்க பிரமிடுகள் கட்டப்பட்டன.

பெரு நாட்டில் மன்னர் இறந்தால் அவருடன் குதிரைகளும் ஏவலாட்களும் கொல்லப்பட்டனர். அந்த அரசனது மனைவிகளும் துணைசெல்லும் பொருட்டு இறக்கவேண்டும்.

பண்டைய காலந்தொட்டு இந்தியாவில் கணவனுடன் மனைவியும் உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்துவந்தது நினைவிருக்கலாம். அதாவது கணவனின் பிணம் எரியும்போது மனைவியும் உயிருடனே அதனுடன் கொளுத்தப்படுவாள்.

ஐரோப்பாவின் சில இடங்களில் பிணத்தின் கையில் பணத்தை வைத்து அடக்கம் செய்யும் பழக்கம் உண்டு. ஏனெனில் அது மரண ஆற்றைக் கடக்கும்போது ஓடக்காரனுக்கு கூலி கொடுக்கப் பயனபடுமாம்.

இதைத்தவிர ஒரு உடலிலிருந்து யோகமுறையில் ஆவியை வெளியேற்றி வேறு உடலில் புகுந்து இயங்கச்செய்யும் கூடுவிட்டுக் கூடுபாயும் முறையும் பண்டைய இந்தியாவில் இருந்ததாகத் தெரிகிறது.

ஹோமர் என்ற மகாகவி தனது இலியட் என்ற நூலில் பரக்லஸ் என்பவன் அச்சில்லிஸ் என்பவனிடம் தனது ஆவி உடலில் வந்தானென்றும் அச்சில்லிஸ் அவனது புகை போன்ற கையைப்பிடிக்க முயன்றபோது அது கைக்கு அகப்படவில்லை என்றும் எழுதியுள்ளார்.

ஹாம்லாத் என்பவன் டென்மார்க் தேசத்து அரசகுமாரன். இவனது தந்தை பூந்தோட்டத்தில் படுத்திருந்தபோது பாம்பு கடித்து இறந்துவிட்டதாகக் கூறி அவரது தம்பி பட்டத்திற்கு வந்தான்.

(7-ம் பக்கம் பார்க்க)

ஞானத்தமிழ்—30

# தனிச் செயல்

இறைவன் அடியார்கள் யாவரும் இறைவனிடத்திலே சிறந்த அன்பை உடையவர்கள். ஆயினும் கண்ணப்பரின் தூய அன்பே சிறப்பான அன்பாக எடுத்துப் பேசப்படுகிறது. உள்ளத்தொடு என்பெலாம் உருக திருவாசகம் பாடிய மணிவாசகரும் ''கண்ணப்பர் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்'' எனக் கண்ணப்பரின் அன்பை வியந்து பாடுகின்றார்.

திருக்காளத்தி மலையிலேறி திங்கள்சேர் சடையாரைக் கண்டவுடனே ''பொருவினை புகுவமானார்'' எனச் சேக்கிழார் கூறுகிறார். அன்பின் மிகுதியினாலே கண்ணப்பர் செய்த செய்கைகள் பல. அவற்

வ. குகசர்மா

றைத் திருநாவுக்கரசர் தாம் பாடிய தேவாரம் ஒன்றில் கூறுகிறார்.

''காப்பதோர் வில்லும்
கையதோர் இறைச்சிப்
பாரம்
தோற்பெரும் செருப்புத்
தொட்டுத் தூயவாய்க்
கலசம் ஆட்டி
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுகத்தன் கண்
கோப்பதும் பற்றிக் கொண்
டார் குறுக்கை வீரட்ட
னாரே''.

என்பது நாவுக்கரசர்தேவாரம்.

இவ்வாறு கண்ணப்பரின் ஒப்பற்ற செயல்கள் பலவாயினும் நாம் இங்கு எடுத்துக்கொண்ட ''தனிச் செயல்'' தூயவாய்க் கலசம் ஆட்டிய செயலாகும். கண்ணப்பரின் உள்ளத்திலே விளைந்த அன்பு உடலெலாம் கலந்து பெருகியது. பெருகிய அன்பை இறைவன் மேல் உமிழ்வதுபோல இருந்தது அவர் வாய்நீர் கலசமாட்டல். இதனைச் சேக்கிழார் ''விளைத்த வன்புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார்'' என அழகுபெறக் கூறுகிறார்.

திருக்காளத்தியப்பரைப் பூசைசெய்த அத்தனாரிடத்திலே சிவபெருமானால் கூறப்பட்டவையும் இங்கே நோக்கத்தக்கன.

''ஒரு முனிவன் செவியுமிழும் உயர்கங்கை முதற்
நீர்த்தப்
பொருபுனலின் எனக் கவன்
றன் வாயுமிழும்
புனலமுதம்''

என இறைவன் கூறுவதாக சேக்கிழார் எடுத்துக்காட்டியுள்ளார்.

கருநிறம் பொருந்திய முகில்கள் காஞ்சிபுரத்திலுள்ள நந்திமலையை நோக்கிவந்தன. கருக்கொண்ட முகில்கள் ஆனதன் மையாலே வானவில்லும்தோன்றியது. நந்திமலையை சூழ்ந்த முகில்கள் அதன்மேல் மழை பொழிகின்றன. இக்காட்சியைக் கண்டார் கந்தபுராணம் பாடிய கச்சியப்பசிவாசாரியார் அடியார்கள் பக்தியும் இறை பக்தியும் நிறைந்த கச்சியப்பருக்கு கண்ணப்பரினது தனிச் செயல் ஞாபகத்தில் வருகிறது.

கண்ணப்பர் கறுப்பு முகிலும் கறுப்பு, அங்கே தோன்றிய வானவில் கண்ணப்பரின் தோளில் மாட்டியுள்ள வில், மழைபெய்தல் கண்ணப்பர் வாயிலே உமிழ்நீரை இறைவன் மேல் உமிழ்தல். திருக்காளத்திமலையில் உள்ள இறைவன் நந்திமலை. எவ்வளவு பொருத்தமான உவமையைக் கண்டார் கச்சியப்பர். கண்ணப்பரின் தனிச் செயலை கண்டவர் ஒருவராக இருக்கலாம். ஆனால் நந்திமலைமீது இக் காட்சியைக் கண்டுகொண்டே இருக்கலாம். கண்ணப்பரின் நினைவு மலைமீது மழைபெய்யும்போதெல்லாம் எம்முள்ளத்தை நிரப்பும், கண்ணப்பரின் தனிச்செயலை இயற்கையிற் காட்டிய கச்சியப்பரின் புலமை போற்றுதற்குரியது.

''பூட்டுவார்முகந்தன்னெடும்
தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புலன் நந்தியம்
கிரிமிசை யுகுத்தல்
வேட்டுவக்குலத் திண்ண
னார் மஞ்சனம் விமலற்[கு]
ஆட்டு கின்றதோர் தனிச்
செயல் போன்றுள
தன்றே''

# ஆளுமே பெண்மை அரசு

சுப்பிரமணிய பாரதியார் இற்றைக்கு ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன்னர்,

'பட்டங்க ளாள்வதுஞ்
சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள்
நடத்த வந்தோம்
எட்டுமறிவினி லாணுக்குப்
பெண்ணிங்கே
இளைப்பில்லை காணென்று
கும்மியடி'

என்று பாடியுள்ளார்.

உலகத்திலே முதற் பெண் பிரதமரைத் தெரிவுசெய்த பெருமை இந்தியாவுக்கல்ல, இலங்கைக்கேயுரியதாகும். திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1960-ம் ஆண்டு இலங்கையின் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டு, இலங்கைக்கு மாத்திரமல்ல உலகத்தில் பெண்குலத்திற்கே பெருமையை வரலாறு காணாத விதத்தில் ஏற்படுத்தியுள்ளார்.

அதன்பின் திருமதி கோல்டா மெயர் இஸ்ரேல் நாட்டின் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டு உலகத்தில் இரண்டாவது பெண் பிரதமராக விளங்கினார்.

ஆனைக்கோட்டை 'திருவன்'

திருமதி இந்திரா காந்தி 1969-ம் ஆண்டு இந்தியப் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டு, உலகத்தில் மூன்றாவது பெண் பிரதமராகத் திகழ்ந்தார்.

உலகத்தில் இறைவன் ஒருவனே தோற்றமும் முடிவும் இல்லாதவன். மற்றவைகளெல்லாம் தோன்றி அழிவன. அதற்கிணங்க இம்மூன்று பெண்மணிகளினதும் ஆட்சிகளும் தற்போது முடிந்துவிட்டன.

இந்தியாவில் இக்காலத்தில் அல்ல, அந்தக்காலத்திலும் பெண்கள் இராச்சிய பரிபாலனம் செய்துதான் இருக்கிருர்கள். மகாபாரதத்தில் வரும் அல்லி அரசாணியைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம்.

இவ்வுலகில் ஆண் இனத்திலும் பார்க்க பெண் இனம் வீறும் இறுமாப்பும் கூடிய தென்பதை ஒரு ஆங்கிலப் புலவர், 'The female of the species is deadlier than the male' என்ற வாக்கியத்தின் மூலமாகக் கூறியுள்ளார்.

இராமாயணத்திலே கவிச் சக்கரவர்த்தி கம்பர், தாடகை என்ற அரக்கியைப் பின்வருமாறு விபரித்துள்ளார்.

'மண்ணுருத்தெடுப்பினும்
கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும்
வேண்டிற் செய்கிற்பாள்
எண்ணுருத் தெரிகுறும்
பாவம் ஈன்டியோர்
பெண்ணுருக்கொண்டெனத்
தெரியும் பெற்றியாள்'

உலகிலேயுள்ள பாவங்கள் அனைத்தும் திரண்டு ஒரு பெண்ணுருவங்கொண்டது போன்ற தாடகை, தனக்கு வேண்டுமென்றால் பூமியைப் பெயர்த்து எடுப்பாள்; கடலை வாரிக்குடிப்பாள்; விண்ணுலகை இடிப்பாள்!

சுப்பிரமணிய பாரதியார், சட்டங்கள் செய்வதும், பட்

(7-ம் பக்கம் பார்க்க)

## கலாயோகியின் வாழ்க்கையும்பணிகளும் -5

# இந்தியாவும் இலங்கையும்

இலங்கை சமூகசீர்திருத்தச்சபையின் 1907-ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டுக்கூட்டத்தில் ''இந்தியாவும் இலங்கையும்'' என்னும் பொருள் பற்றி ஆனந்தகுமாரசுவாமி தலைமையுரை நிகழ்த்தினார். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்துவது அவருடைய வாழ்க்கையின் ஓர் இலட்சியமாகவிருந்தது. இருநாடுகளின் நன்மை கருதி இந்த உறவை வலுப்படுத்த முயற்சித்தார். அந்த நீண்ட உரையின் சாரத்தை இங்கு தருகின்றேன்.

இந்திய இலங்கை உறவைப் பற்றிப் பேசும்போது இப்போது நமக்கப்பாற்பட்ட அரசியல் அல்லது பொருளாதார உறவைப்பற்றி நான் பேச முன்வரவில்லை. நான் கருதுவது மானசிக, ஆத்மீக உறவையாகும். இந்த உறவை இலங்கை, ஐரோப்பாவோடு அல்லது, இந்தியாவோடு வைத்திருக்கப்போகிறதா என்பதுதான் கேள்வி. இன்றும் இந்தியா நமது தாய்நாடாகவிருக்கப்போகிறதா? அல்லது நாம் அனாதைகளாக வாழப்போகிறோமா? இந்தக் கேள்விக்கு விடைகாண்பதிலேயே நமது எதிர்காலம் தங்கியிருக்கிறது.

நம்மவரிற் சிலர் பழமையை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் புதுமை மோகத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள் இருசாராராலும் நமது நாட்டுக்கு நன்மை வராது. இடையில் நமது மத்தியில் புகுந்த 'தீண்டாமை' பால்ய விவாகம் போன்றவற்றைக்கைவிட நாம் தயாராகவிருக்கவேண்டும். அதே போல் மேனாட்டுப் பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதைத் தவிர்க்கவேண்டும். நமது பகுத்தறிவை உபயோகித்து, நமது பாரம்பரியத்துக்கு ஏற்ற முறையில் வாழவேண்டும்.

நமது பண்டைப்பெருமையில் நமக்கு நம்பிக்கையிருக்கவேண்டும். இந்தியாவும் இலங்கையும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் பெரும் பணியாற்றவிருக்கிறதென்பதை நாம் உணரவேண்டும். காலத்துக்காலம் நமது நாடுகளில் பெரியார்கள் தோன்றிக் காலத்துக்கேற்ற மாற்றங்களை செய்துள்ளார்கள். இப்பொழுது நம் மத்தியில் காணப்படும் குற்றங்குறைகளை இந்திய முறையிலேயே தீர்த்துக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தேசத்துக்கும் சில சிறந்த பண்புகள் உண்டு. அவற்றைப் பேணிக்காப்பதினாலேதான் ஒரு தேசம் உலக நாகரிக வளர்ச்சிக்கு தனது கடமையைச் செய்யலாம். இந்தியருக்கு மில்ரன், சேக்ஸ்பியர் முதலியோரின் நூல்களைப் படிப்பதிலும், ஐரோப்பிய உடையை அணிவதிலும் பார்க்க ஒரு கடமை உண்டென்பதை உணரவேண்டும். எல்லாவிஷயங்களிலும் இந்திய மனப்பான்மையுடையவர்களாயிருக்கவேண்டும். ஐரோப்பியரின் வழியைப் பின்பற்றக்கூடாது. நான் வற்புறுத்துவதென்னவெனில், உலகுக்கு இந்தியா ஆற்றவேண்டிய பணி இன்றும் முற்றுப்பெறவில்லை. இந்தியா அதனைச் செய்யாவிட்டால் அதனை வேறொருவராலும் செய்யமுடியாது.

புது அறிவைக்கொண்டு இந்தியா, சமூகஅமைப்பு, சங்கீதம், கலை இலக்கியம் முதலிய துறைகளில் வீறுகொண்டுழைத்து இத் துறைகளில் நமது முன்னோர் கண்ட கனவுகளை நனவாக்கவேண்டும். இப் பணியில் இலங்கையர்களாகிய நாங்களும் ஒத்துழைக்கவேண்டும். நமது

ச. அம்பிகைபாகன்

சுவதர்மத்தைச் செய்யவேண்டியதே நமது கடமை. இந்திய நாகரிகத்தின் சிறப்புக்களை அறிய விரும்பிவரும் மேல்நாட்டினர், நாமிப்போது கட்டடம், ஓவியம், சங்கீதம் முதலிய துறைகளில் மேல்நாட்டாரை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதைக் கண்டு ஏமாற்றமடைகின்றனர். சுதந்திரத்தில் நாட்டமுடையவர்கள் இந்தியாவில் பல தலைவர்கள் விசாரணையில்லாமல் கால வரையறையின்றி மறியலில் போடப்பட்டிருப்பதைக்கண்டு ஏமாற்றம் அடைகின்றனர்.

தேசியம் சர்வதேச ஒற்றுமைக்கு தடையாகவிருக்கிறது என்ற போலிக் கூற்றைச் சிலர் எழுப்புகின்றனர். தேசியம் ஒரு நாடு வாழ்வதற்கு வழிவகுப்பதோடு சர்வதேச ஒற்றுமைக்கும்வழிவகுக்கிறது. தேசியம் ஒரு தேசத்தின் தனிப் பண்புகளை வளர்த்து உலகின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. சர்வதேச ஒற்றுமை ஒவ்வொரு தேசத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளது. எல்லாத் தேசங்களும் ஒரேமாதிரியிருந்தால் அதில் என்ன சிறப்புண்டு. ஒருதாய் தன் மகள் தன்னைப் போல் இல்லையென்பதால் அவளைக் குறைவாக நேசிக்கிறாளா? நாம் மற்றவர்கள் எம்மைப்போலிருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லை. தன்னிடம் இல்லாத சில பண்புகளையே மற்றவர்களிடம் எதிர்பார்க்கிறோம். ஒவ்வொருவருக்கும் அவர்களின் பூரண வளர்ச்சிக்கு இடம்கொடுப்பதிலேயே அவர்களுடைய அன்பைப் பெறலாம். இவ்வுண்மை தேசங்களுக்கும் பொருந்தும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவிலுள்ள பிரதேசங்களுக்கிடையில் மேலெழுந்தவாரியாகக் காணப்படும் வேற்றுமைகளிலும் பார்க்க அடிப்படையான ஒற்றுமையைக் காணவேண்டும். இந்திய சரித்திரம், கலைகள் முதலியவற்றைப் படிப்போருக்கு ஐரோப்பாவின் பலபாகங்களுக்குமிடையில் காணப்படும் ஒற்றுமையிலும் பார்க்க இந்தியப் பிரதேசங்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமை கூடியதாகத்தோன்றும். மகமதியர் படையெடுப்புக்குமுன் படையெடுத்துவந்தவர்கள் இந்தியாவுடன் ஒன்றுகிவிட்டார்கள். மகமதியர் இப்பொழுதுதான் இந்தியருடன் ஒத்து வாழத் தொடங்கியுள்ளார்கள். ஆங்கிலேயரால் இது முடியுமென நான் நினைக்கவில்லை. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பகுதியும் அதன் சிறப்புக்கு உதவியுள்ளது. இது இலங்கைக்கு விசேடமாகப் பொருந்தும். இந்தியாவின் பண்டைய சரித்திரத்தை அறிவதற்கு இலங்கை மிகவும் உதவுகிறது. இலங்கை பாளி இலக்கியதிற்கும் தேரவாத, பௌத்தத்துக்கும் சிறந்த உறைவிடமாகவிருக்கிறது. இலங்கையில் எழுதப்பட்ட மகாவம்சம், இந்தியாவில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களின் காலத்தை நிர்ணயிக்க உதவுகிறது.

மகாவம்சம் போன்ற ஒரு சரித்திர நூல் இந்தியாவில் இல்லை. இந்தியாவின் சிறந்த இதிகாசமான இராமாயணம் இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கிறது. இலங்கையில் சீதை தங்கியிருந்ததாகக் கருதப்படும் இடங்களுக்கு அவர் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் விஜயன் வருகையும் அசோகனின் மக்களின் வருகையும், பத்மாவதியின் சரித்திரமும் இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கின்றன. பத்மாவதியென்னும் சிங்கள அரசிளங்குமரி இராஜபுத்திர இளைஞனை மணஞ்செய்த வரலாறும் தனது கற்பைப் பாதுகாப்பதற்கு தீயில் குதித்து உயிர்மாய்த்த கதையும் இப்பொழுதும் வட இந்தியர் நினைவுகூருகின்றனர்.

(தொடரும்)

---

(முன் தொடர்ச்சி)

## வானொலி நாடகம் எழுதுவது எப்படி-7

# தண்டனை

"வரணியூரான்"

முத்தை: (வந்து கொண்டு) வைத்திலிங்கம் ஐயா என்டது...

வைத்தி: நான்தான் வாருங்கோ...வாங்கோ ... நீங்கள்...

முத்தை: என்னை உங்களுக்குத் தெரியாது...நான் பிற ஊர்...இந்த ஊருக்கு வந்து கொஞ்ச நாள்தான் ஆகுது... உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டன்.

வைத்தி: உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால்...தாராளமாகக் கேட்கலாம். நான் கூடப்பிறவா ஊரவன்தான்.

முத்தை: உங்களுடைய தாராள குணத்தைக் கேள்விப்பட்டுத்தானே இலங்கை வந்திருக்கிறன். எங்களுடைய ஊரிலையும் ஐயா...வைத்திலிங்கம் என்டு ஒருத்தர் இருந்தவர். மகாநல்லவர்தான்...கடைசியிலை ஊரை விட்டே ஓடிப்போய்விட்டார்.

வைத்: உங்களுடைய ஊர் எது?

முத்தை: நாகர் கோயில்...

வைத்; [சமாளிப்பதுபோல்] ஏன் ஊரை விட்டே ஓடினவர்...

முத்தை; சாயம் வெளுத்துப் போய்ச்சுது...

வைத்தி: என்னது...

முத்தை: ஓம்...ஐயா ... எத்தனை நாளைக்குத்தான் ஊரை ஏமாத்த முடியும் நல்லவன் என்ட போர்வையிலை அவன் செய்த திருவிளையாடல்களுக்குக் கணக்கில்லை.

வைத்தி: அப்பிடி என்ன செய்தான்...

முத்தை: தங்கம் என்ட ஒரு பெண்ணை ஆசைகாட்டி மோசம் செய்தான். பிறந்த குழந்தையைக்கூடக் கொலை செய்தான். விஷயம் வெளியாலை தெரிஞ்சுபோகுமேஎன்ட பயத்திலை ... தங்கத்தையும் கொலை செய்யப்பார்த்தான். அவள் தப்பிவிட்டாள். கள்ள நோட்டடிச்சான். கசிப்புக் குகை நடத்தினான். அகப்பட்ட பெண்களையெல்லாம் அண்டிக்கெடுத்தான். முத்தையா என்டு ஒரு அப்பாவியை...மறியலுக்கு அனுப்பிப் போட்டு அவனுடைய பெண்சாதியோடை தகாத முறையிலை நடக்கப்பார்த்தான். அவள் மறுக்கவே அவளுடைய வீட்டை நெருப்புவைச்சுக் கொளுத்தினான்...

வைத்தி; அடபாவி ... அந்தப் பெண் இறந்துவிட்டாளா?

முத்தை: நல்ல காலம் வைத்திலிங்கத்தாலை வஞ்சிக்கப்பட்ட தங்கம்...சமயத்திலை முத்தையாவிடை பெண்சாதியைக் காப்பாற்றி புகலிடம் அளிச்சாள்.

வைத்தி: அந்தச் சண்டாளனை உயிரோடை விட்டு வைச்சிருக்கினமா உங்களுடைய ஊர் மக்கள்...

முத்தை: என்ன செய்கிறது. ஊர் மக்கள்தான் அவனை நல்லவன் என்று நம்பி ஏமாந்தது. முத்தையன் மறியலிலையிருந்து வந்தவுடனை என்ன நடக்கும் என்டு வைத்திலிங்கத்துக்குத் தெரியும். அதனாலை அவன் மறியலாலை வாறதுக்கிடையிலை ஊரைவிட்டே ஓடிவிட்டான்.

வைத்தி: அது போகட்டும்... என்னைத் தேடி நீங்கள் வந்த காரணம் என்னவோ...

முத்தை: வைத்திலிங்கம் ஐயா...அந்தப் பாவி இந்த ஊரிலைதான் இருக்கிறதாகக் கேள்விப்பட்டன். இந்த ஊர் பெரிய மனுஷன் நீங்கள். உங்களுக்கு அந்தச் சண்டாளனைத் தெரியுமா?

வைத்தி: எனக்கு அப்படி ஒருதரையும் தெரியாது...

முத்தை: சரி ஐயா...நான் வாறன்...

வைத்தி: நில் முத்தையா... என்னைப் பழிக்குப்பழி வாங்கத்தான் வந்திருக்கிறியா...

முத்தை: வைத்திலிங்கம் உன்னைப் பழி வாங்கிறது எனக்குப் பெரிய காரியம் என்டு நினைக்கவேண்டாம். எதுக்கும் துணிஞ்சவன் நான். ஆனால் அந்த நல்ல காரியத்தைத் தங்கம் தன்னுடைய கையாலை நிறைவேற்றுவாள்.

வைத்தி: ஓ...தங்கமும் உன்னோடை சேர்ந்திட்டாளா...

முத்தை: வைத்திலிங்கம்... தங்கத்திட்டைக்கூட நீ தப்பிவிடலாம்...ஆனால் கடவுள் தண்டனையிலிருந்து நீ தப்ப முடியாது. உன்னுடைய மனச்சாட்சி... உன்னை உயிரோடை கொல்லும். தங்கத்துடைய கண்ணீர் உன்னை அணு அணுவாகச் சித்திரவதை செய்யும்.

வைத்: முத்தையா மனுஷன் எண்டைக்குமே கெட்டவனாக இருக்கமுடியாது. 'என்னுடைய தவறுகளை உணர்ந்து நான் திருந்திவிட்டன். நான் இப்ப பழைய வைத்திலிங்கம் இல்லை...

முத்தை; நீ பழைய வைத்திலிங்கம்இல்லைத்தான்..வைத்திலிங்கம் ஐயா ... ஊருக்குப் பெரிய மனுஷன்...

வைத்தி: அப்ப என்னைக் கொல்லப்போறியா...கொல்லு ...உன்னுடைய கையாலேயே என்னைக் கொல்லு...

முத்தை: நான் உன்னைக் கொல்ல வரயில்லை...அதுதான் சொன்னனே, அந்த நல்ல காரியம் தங்கத்தாலை நிறைவேறும்...

வைத்தி: முத்தையா...(அழுகிறார்) நான் கூடச் சாவுக்குப்பயப்படயில்லைமுத்தையா. தங்கத்துடைய காலிலை விழுந்து நான் மன்னிப்புக் கேட்கவேணும். அதுக்குப் பிறகு...அவள் என்னைக்கொலை செய்யலாம்.

முத்தை: வைத்திலிங்கம் உன்னை இப்பவாவது நான் நம்பலாமா?

வைத்: கடவுளே ... இந்தத் தண்டனையை என்னால் பொறுக்க முடியாது.(தலையை மேசையில் மோதுகிறான்).

முத்தை: மேசையிலை அடிச்சு தலையை உடைக்க வேண்டாம் வைத்திலிங்கம். நான் உன்னை நம்புறன். தங்கம் உன்னைக் கொல்ல நான் விடமாட்டன். உங்கள் இரண்டு பேரையும் நான் [போய்க்கொண்டு] சேர்த்து வைக்கிறன். அழவேண்டாம்... நாளைக் காலமை தங்கத்தோடை உன்னை இங்கை வந்து சந்திக்கிறன்.

வைத்தி: [தனக்குள்] தங்கம் என்னைப் பழிவாங்கத்தான் போகிறாள். இந்த ஊரிலை எனக்குள்ள செல்வாக்கு ஒரு நொடியிலை பாழாகிப் போகும். நான் விடியிறதுக்கிடையிலை இந்த ஊரை விட்டே ஓடிவிட்டால் ... அதுதான் சரி...என்னுடையகாரை எடுத்துக்கொண்டு போவோம்.

[கார் போகும் சத்தம்].

ஆர் அது...தங்கம் அல்லவா போகிறாள். இந்த இரவு நேரத்திலை எங்கை போறாள். அருமையான சந்தர்ப்பம். இவளைக் காராலை மோதிக் கொன்றுவிடவேண்டும். பிறகு என்னுடைய ... இரகசியங்கள் வெளியிலையே வராது. இனி யோசிக்கக்கூடாது. [சிரிப்பு] ஆ...விலகி விலகிப் போறாயா...மரம்...மரம்...

]கார் பெரிய மரத்தில் மோதும் சத்தம்]

தங்கம்: [பயங்கரக் கத்தலுடன்[ ஆ...அம்மா வைத்திலிங்கத்தைக் கொல்ல முடியவில்லையே...அவளைக் கொல்ல நினைச்சன். நானே காரிலை மோதி...ஆ...அம்மா...

வைத்தி: தங்கம் ... தங்கம்...உன்னைக்கொல்ல நினைச்சன். எங்கே...ஆ...அம்மா... எனக்குத் தண்டனை கிடைச்சிட்டுது. தங்கம். இது கடவுள் த..ண்...ட...னை...ஆ [இறத்தல்,]

[திருப்பு காட்சி]

[இசை]

முத்தை; இப்ப சொல்லுங்கோ முருகுப்பிள்ளை...கடவுள் இருக்கிறாரா.. இல்லையா...

முருகு: வைத்திலிங்கந்தான் கெட்டவன். அதுக்குத் தண்டனை கிடைச்சுது. சரி...தங்கம் என்ன குற்றம் செய்தவள். எதுக்கு அவளுக்குத் தண்டனை கிடைச்சுது.

முத்தை; தங்கமும் வைத்திலிங்கத்தோடை சேர்ந்து பல சதிகளுக்கு உடந்தையாக இருந்தவள். அதினாலைதான்... வைத்திலிங்கத்துடைய இரகசியங்களெல்லாம் தங்கத்துக்குத் தெரிஞ்சிருந்தது முருகுப்பிள்ளை ... வைத்திலிங்கத்தைப் போலை எத்தனையோ பேர் தங்களுடைய கெட்ட நடவடிக்கைகளை மறைக்கிறதுக்காகத்தான் பல நல்ல காரியங்களைச்செய்து கொண்டு வருகினம். அதினாலை... ஊராருடைய கண்களை ஏமாத்திவிடலாம். நல்லவன் போலை வாழ்ந்திடலாம் ... கடவுளை ஏமாத்த முடியாது. எண்டைக்காவது ஒருநாள் கடவுள் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது. இதுக்கு வைத்திலிங்கத்துடைய ... மரணம் ஒரு ... எடுத்துக்காட்டு.

குறி

]இசை]

# மகாத்மா என்ற —மகத்தான —சக்தி !



மற்ரேர் தருந்த துயர் தனை யேற்றல்-எனினும் மனந் துணிந்து குற்றங்குற்றமே எனத் தீங்கை எதிர்த்துக் குமுறி நிற்றல் - சற்றேனும் பிறரை வருத்தாமல் தமையே வருத்தி நீதியை நிலைநாட்டப் போராடுதல் — இதுதான் அகிம்சை முறை—ஒத்துழை யாமை இயக்கமென்னும் பெயரில் அண்ணல் காந்தி உருவாக்கிய மாபெரும் எதிர்ப்புச் சக்தியின் அடித்தளமாக அமைந்து நின்றது.

இவ்வகிம்சா இயக்கம் என்னும் மகத்தான சக்தியை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்தமையால்தான் அண்ணல் காந்தி, மகாத்மா என்ற மகத்தான சக்தியாக உலகினுல் ஏற்றித் தொழப்படுகின்ருர்.

அகிம்சையின் பூரண வளர்ச்சியை அண்ணல் காந்திஜியின் வாழ்விலும் அவர் நடாத்திய இயக்கங்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. அகிம்சையை ஒடுக்கப்பட்ட மக்களின் வலிமை மிக்க ஆயுதமாக-அரசியல் சக்தியாக மாற்றிய பெருமை அண்ணல் காந்திக்கே உரியது. அதனுல்தான் உலகின் விடுதலை வரலாறுகளில் எல்லாம் முற்றிலும் வேறுபட்ட குணதிசயங்களை பாரத விடுதலை வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

## தமிழகத்தின் கொடைகள்

அண்ணல் காந்தியின் அரசியல் வெற்றிகளின் அடிப்

**பற்றிமாகரன்**

படைக்காரணியாகத் திகழ்ந்த சத்தியாக்கிரகத்தை அவர் செந்தமிழ் மண்ணில்தான் முதன் முறையாகத்திட்டமிட்டார்.

அண்ணலை அரைநிர்வாணப் பக்கிரி என வின்சன்ட் சர்ச்சில் எள்ளிநகையாட வைத்து அவரின் அரையில் முழம் உடுத்தும் எளிமைத் தோற்றத்தை அவருக்கு வழங்கிய பெருமையும் தமிழகத்திற்கே சாரும். வயல் வெளிகளில் திறந்த நெஞ்சுடனும் அரைத் துண்டுடனும் அயராது பாடுபடும் தமிழகத்து விவசாயிகளைக் கண்ட காந்தி, அவர்களின் எளிமை ஆடையையே அன்றுமுதல் தன் சொந்த ஆடையாக மாற்றிக்கொண்டார்.

## தீண்டாமை இரட்சகர்

ஹரிஜன மக்களுடன் மக்களாய் சங்கமமாகி வாழ்ந்த காந்தி, ஹரிஜனப்பிள்ளையைத் தன் சொந்தப்பிள்ளையாக்கி, சொல்லைச் செயலாக்கும் அரசியல்வாதியாகத் திகழ்ந்தார். காந்திக்கிராமம் அமைத்து கூட்டுறவுமுறையில் எல்லோரும் எல்லா வேலைகளையும் பகிர்ந்து செய்யும் அமைப்பை ஏற்படுத்தி வாழ்ந்தவர் அவர். எவ்வாறு இராமனின் மேல் திராத பற்றுக்கொண்ட இராமாநந்தர் சக்கிலியராகிய இரவிதாஸரையும் - இஸ்லாமிய நெசவுக்கார கபீர்தாஸரையும் தன் இரு கண்களாக கட்டி அணைத்து வழி நடத்தினரோ அவ்வாறே இராமன் மேல் திராத பற்றுக்கொண்ட காந்தி, பாரதத்தின் ஹரிஜனமக்களை எல்லாம் தன் சொந்தப்பிள்ளைகளாகக் கருதி வாழ்ந்தார்.

## காந்திஜியும் சமூகமும்

மேலைத்தேய மோகம் பாரதத்து மக்களை படுகுழியில் தள்ளிவிடுமெனப் பயந்த காந்தி ''நமது முன்னேரின் நடையுடை பாவனைகள் யாவும் மூடப்பழக்க வழக்கங்களின் குவியல்களைத்தவிர வேறில்லை என கீழைநாட்டினராகிய நாம் அவசரப்பட்டு எண்ணிவிடுகிறேம். கீழை நாட்டில் மதிப்பிடமுடியாத பொக்கிஷங்கள் இருக்கின்றன; அவற்றிலே மூடப்பழக்கங்களும் இருக்கலாம். அளவிட முடியாத சிறந்த அம்சங்களும் உண்டு. மூடப்பழக்கங்கள் அல்லாதவற்றை நன்குபுரிந்து கொண்டு அவற்றை நடைமுறையில் அனுஷ்டிப்போமானுல் அவை ஒருவனுக்கு நல் வாழ்வைத் தந்து அவனை மேன்மைப்படுத்துகின்றன. நீண்டகாலமாக எனக்குள்ள சொந்த அனுபவத்தினுல் ஏற்பட்ட முடிபு இது. மயக்கந்தருகிற மேலைநாட்டு நாகரீகத்தைக் கண்டு நாம் ஏமாருமல் இருப்போமாக'' என எச்சரிக்கைக் குரல் கொடுத்தார். அத்தோடு நில்லாது கல்வி அபிவிருத்தி மூலம் மக்களின் சிந்தனையை நல்வழிப் படுத்த முயன்ருர். ''ஒரு நாட்டைச் சேர்ந்த குழந்தைகள் அந்நாட்டுக்குரிய தாய்மொழியிற் கல்விபயிலாமல் வேறு மொழியிற் கல்வி பயிலுவார்களேயானுல் கல்வியைப் பற்றியவரையிலே நிச்சயமாக அது தற்கொலைக்கு ஒப்பாகும்'' எனக் கூறிய காந்தி, சிறுவர்களுக்கு மட்டுமல்லாது வளர்ந்தோருக்கான கல்வித் திட்டங்கள்-கிராமியக் கல்வித் திட்டங்கள் போன்றவற்றையும் நடைமுறைப்படுத்தியவர்.

## காந்தியும் பெண்களும்

பெண்ணடிமை நிலையை முற்ருக எதிர்த்த காந்திஜி இதேவேளையில் பெண்களின் கட்டுப்பாடற்ற தன்னிச்சைப் போக்கான சுதந்திரத்தையும் வெறுத்தார். மேலைத்தேய இலக்கியங்கள் பெண்ணை இன்பப் போதைப் பொருளாக மட்டுமே கருதுகின்றன. ஆனுல் கீழைத்தேய இலக்கியங்களோ பெண்ணை புனிதப்பொருளாகத் தெய்வமாகக் கொண்டாடுகின்றன. இவ்விலக்கிய மரபோடியைந்த பெண் விடுதலையைத்தான் காந்தி விரும்பினுர்.

இளம் விதவைகள் மறுமணத்தை வரவேற்ற முதல் அரசியல்வாதி அண்ணல் காந்தி விதிவசத்தால் வாழ்விழந்து-பொட்டிழந்த பெண்களை விலைப்பொருளாக்காது-கலைப்பொருளாக்காது வாழ்கின்ற உயிர்ப்பொருளாகக் கருதிய காந்தி, மறுமணம் பற்றி எழுதிய எழுத்துக்கள், அவரை பழமை விரும்பி என்பவர்களுக்குச் சரியான மறுப்புக்களாக உள்ளன.

> அகிம்சாமூர்த்தி— அண்ணல் காந்தியின் 108 -வது பிறந்தநாளை உலகு உவப்புடன் இன்று நினைவு கூர்கின்றது. அதன் நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

## கர்ப்பத்தடையும் காந்தியும்

செயற்கை முறையிலான கர்ப்பத்தடைகளை காந்தி அறவே வெறுத்தார். இயற்கை முறையான கர்ப்பவிலக்குகளையே அவர் விரும்பினுர். மனத்திடத்தால் வாழ்வை அமைக்கமுடியாத கோழைகள் இரசாயன சேர்க்கைகளால் காபந்து பெற்று இன்பம் துய்ப்பதை அவர் வெறுத்தார். அவரும் கஸ்தூரிபாயும் வாழ்ந்த வாழ்க்கை மனித மனத்திடத்தின் பிரதிபலிப்பாக அமைந்தது.

## தொழிலமைப்பும் காந்தியும்

தொழிற்கல்வியையே காந்தி அதிகம் விரும்பினுர். ஆனுல் அத் தொழிற்கல்வி சகோதரத்துவ விடுதலையை வழங்கக் கூடியதாக இருக்கவேண்டுமென்றும் அவர் விரும்பினுர். ஏழைகளுக்குஏழைகனாயிருப்பவர்களுடன் ஒன்றிக்கலப்பதற்கு ஓர் அடையாளமாகவும் அதோடன்றி கலைப் பயிற்சியாகவும்உள்ள தொழில் என்னைப் பொறுத்தவரை ''நூல்நூற்றல்'' என்னும் அவரின் வார்த்தைகளில் அவர் எத்தகைய தொழிலமைப்பை தேடினுரெனத் தெட்டத் தெளிவாகப் புலனுகிறது. நூற்றுக்கு நூறு வீதம் எந்திரமயமாவதை அவர் அடியோடு வெறுத்தார். மனித சக்திக்கு அப்பால் ஏற்படும் தேவைகளுக்கே இயந்திரம் பயன்படல்வேண்டுமென்பதே

(7ம் பக்கம் பார்க்க)

## 'இதயம் நிறைந்த தாத்தா'

—அரியாலையூர் சி. சிவதாசன்


காந்தி யென்ற தாத்தா
கருணை மிகுந்த தாத்தா
காந்தம் போல மாந்தரைக்
கவர்ந்த வன்புத் தாத்தா!

நீதி யென்ற பாதையில்
நின்று யர்ந்த தாத்தா
சாதி யென்ற பேதமதைத்
தகர்த் தெறிந்த தாத்தா!

அன்புத் தாயின் கட்டளைக்(கு)
கடங்கி வாழ்ந்த தாத்தா
அன்னியரை அகிம்சா வழியில்
எதிர்த்து நின்ற தாத்தா!

பிறந்த மண்ணில் சுதந்திரம்
பிறக்கச் செய்த தாத்தா
இறந்து மின்றும் மக்களின்
இதயம் நிறைந்த தாத்தா!


கிணற்றடியினிலே




இல்லம் சிறக்க, உள்ளம் களிக்க. பிள்ளைகள் சுகமாய்த் துள்ளித்திரிய, நாளை அவர்கள் நலமெலாம் எய்த, கணவன் மனைவி கலந்து பேசி. இடைவெளி விட்டுக் குழந்தை பெற வேண்டும். உனக்கு நான், எனக்கு நீ என்று ஒருவரோடொருவர் ஒத்துப் பேசிக் குடும்பத்திட்டம் செய்து குதூகலமாய் வாழுங்கள்.

கூடிப் பேசி வாழும் குடும்பம்
கோடி இன்பம் சூழும் குடும்பம்

எல்லா விபரங்களையும் இலகுவாய் விளக்கும் குடும்பத் திட்டப் பிரசுரங்களை இலவசமாய்ப் பெற இந்தக் கூப்பனை நிரப்பி, கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புங்கள்.

பெயர்.............................................

விலாசம்: .........................................

இலங்கை குடும்பத் திட்டச் சங்கம்
37/27 புள்ளர்ஸ் ஒழுங்கை கொழும்பு 7 தொலைபேசி: 88131

BB/A/2

**நாகம்மாள்** (சுன்னாகம்)
தினசரி 6-45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
**பூம்புகார்**

**புலோலி சினிமாஸ்** (பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
**வல்லவன் ஒருவன்**

**RIO** (Jaffna) Daily 10-30, a.m. 4-45, 7-15 p. m.
PETER CUSHING – BERNARD LEE
in
**FURY AT SMUGGLER'S BAY**
(கடத்தல்காரர் பக்கம் குமுறல்)
Eastman Colour Panascope

**மனோஹரா** (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ் அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
ஃ சிவாஜி (மூன்று வேடங்கள்)
ஃ ஜெயலலிதா
**தெய்வ மகன்** (புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெயபிரபா அசோகன்
**துணிவே துணை**

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7693 தினசரி 10-30,2-30, 6-15,9-30
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
**பணம் பந்தியிலே**
அடுத்த வெளியீடு **நீதிக்கு தலை வணங்கு**

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
**"SHARK"**
(Action Film color)
From tomorrow
SEXY SUSAN KNOWS HOW
(Adults only Color)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-00 9-35 போன்: 7180
எம். ஜி. ஆர்—ராஜசுலோசனா சந்திரபாபு நடித்த
**குலேபகாவலி** [புதியபிரதி]

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30,6-30,9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
**அன்னக்கிளி**

**ராணி** (யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**


# சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''இஞ்ச கந்தையாண்ணை பவுண் நூறுக்குமேல் என்னுல தரமுடியாது... அப்படி இல்லாட்டி வேறை எங்கையாவது பாரும்...'' என்று நடராசா கையை விரித்தபோது தான் கமக்காரருக்கு வானம் இருண்டு, மின்னல் பளிச்சிட்டு இடி இடித்தது போன்றிருந்தது.

நடந்து நடந்து சோர்ந்து போனகால்கள்கெஞ்சிக்கெஞ்சி அலுத்துப்போனவாம்; மௌனக் கண்ணீர் வடித்த பஞ்சடைந்த கண்கள் இவற்றோடு கந்தையா சுந்தரமூர்த்தி வீட்டிற்குச் சென்றார். அங்கேயும் தோற்றுப்போய் வீடு திரும்பும் மார்க்கமாக கால்கள் அசைந்தன.

கந்தையா கள்ளு அருந்துவதில்லைதான். இருந்தாலும் எப்போதாவது இடையிடையே அளவோடு அருந்துவார். தவறணை நெருங்கி விட்டதென்பதை உணர்ந்தார். கந்தையா அவ்வேளை கார் மேகமாகக் கவிந்திருந்த மனத்துயருக்கு உகந்த ஓர் ஒதுக்கிடமாக 'கொட்டில்' தோற்றியது.

கைகள் தம்மையறியாமல் மடியைத் தடவி சில சில்றறை நாணயத்தை எடுத்தன. அவர்கள் அருந்தியபின், கள்அவரை விழுங்கிய நிலையில் மெல்ல எழுந்தார்.

''டேய் கந்தையா!...''

திடுக்குற்றுத் திரும்பினார்.

அங்கே செட்டியார் செல்லையா கோபக்கனல்வீச கந்தையாவை நெருங்கினார்.

''உன்ரை பெட்டையை நீ அடக்கப்போறியோ... அல்லது நான் அடக்கட்டோ!...''

''ஏன் அண்ணை... என்ன நடந்தது...?''— கந்தையா பயத்தால் நடுநடுங்கி பணிவுடனே கேட்டார்.

''ஏன்ரா உனக்கொண்டும் தெரியாததுபோல் வேஷம் போடுகிறாய்...''

''அண்ணையாணை தெரியாது...''

''தெரியாதோ! ...''தலையை ஆட்டியவாறு''... ம்...''என்று முறுகினார் செட்டியார்.

''உன்ரை பெட்டையை வீட்டிலை பூட்டிவை... என்ர பெடியனைக் கெடுக்க வந்திட்டாள்... அவளை இனிமேல் கண்டனண்டால் வெட்டிப் போடுவன்...''

சிறிதுநேர அமைதிக்குப் பின்—

''ஏன் உம்முடைய பெடியனை அடக்கிவைச்சால் என்ன?...''—

கிளர்ந்தெழுந்த வீறுடனே கந்தையா கர்ச்சித்தது, தவறணையை ஒருகணம் கிடுகிடுக்கவைத்தது.

''என்னடா நீயும் கதைக்க வெளிக்கிட்டியோ...'' என்றவாறு செல்லையர் கந்தையாவிற்கு ஒன்று; இரண்டு; மூன்று; நாலு ஆகக் கொடுத்துக் கட்டினார். கந்தையர் கீழே சாய்ந்தார்; மூக்காலும் வாயாலும் இரத்தம் கக்குகிறது...

விழுந்ததினால் ஏற்பட்ட சிராய்ப்புக்காயங்களிலிருந்து கசிந்து கசிந்து காய்ந்துபோன இரத்தமும், மூக்காலும், வாயாலும் வடியும் இரத்தமும் கந்தையாவை ஒரு இரத்தக் களரியாகவே மாற்றியது.

அவரது உழைப்பின் களமான செம்மண்ணில் கலந்த செங்குருதி இன்று அனுவசியமாக வீதியில் சொட்டுப் போடுகிறது.

அலையாய் எழுந்த அவலப் புயல் அவரது இதயத்தின் மென்சுவரைத் தாக்கிற்று.

பித்தனாய் வெறியனாய் பேய்க்கணமாய் தள்ளாடித் தளர்ந்துபோய், மேலெல்லாம் சிராய்ப்புக் காயங்களுடனே, காற்றிற்கே ஈடுகொடுக்க மாட்டாமல் ஆடிஅலைமோதி... அந்தோ! வீதியில் சரிகிறார்.

செம்மண் களபூமியில் எழுந்த அந்த செம்மண் கூண்டு... கோபுரம்... அத்துடனே அவர் தம் சிந்தையில் வளர்ந்த ஆயிரம் கனவுகள் செம்மண் கலமாக ஆங்கு சுக்கு நூறாய் சிதறிப்போகின்றன.

வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் இவ்வடபால் பூமியில் வீசும் தென்மேற்குப் பருவக்காற்று என்றும்போல் இன்றும் வீசிக்கொண்டிருக்கிறது.

அதனால் நாளைக் காலை புது நாள் புதியநம்பிக்கைகளுடனே விடியும்; புதுவாழ்வொன்று புதும்லராக மலரும். கிணற்று நீர் வாய்க்காலிலே பாய்ந்தோடி வரும்போது சிலிர்த்து ஆட்டம்போடும் பயிர்ச்செல்வங்களைப் பார்த்து மனங் குளிரும். திளைப்புனத்தையனின் சிந்தையிலே புதிய கனவுகள் ஆசைகள் துளிர்த்து மறுமலர்ச்சிபெறும்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே தவழ்ந்துவரும் இந்தத் தென்றல் காற்றுக்கு அந்தளவு அபூர்வமான ஜீவசக்தி உண்டு.

அது ஒரு விந்தையா.

(யாவும் கற்பனை)

# பார்வை குறைந்தமாணவர்: லயன்ஸ் கழகம் உதவும்

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள 86 கண்பார்வை குறைந்த மாணவர்களுக்கு உதவத் தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தெல்லிப்பழைப் பகுதிப் பாடசாலைகளில் பயிலும் 86 மாணவர்களுக்குக் கண்பார்வைக் குறைவு இருப்பதாகத் தெரியவந்துள்ளதையடுத்து, அவர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சையளித்து இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கத் தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

அத்துடன் இப்பகுதியில் மலசலகூடம் இல்லாத மக்களுக்கு இதுவரை 29 மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்துள்ள இக்கழகம் தற்போது 5 மலசலகூடங்கள் அமைத்துவருவதாகவும், தொடர்ந்தும் மலசலகூடம் இல்லாதவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படுமென்றும் மேற்படி கழகத் தலைவர் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் தெரிவித்தார்.

# ஆளுமே...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

டங்கள் ஆள்வதும் மாத்திரம்தான் ஒரு பெண்ணின் கடமை என்று சொல்லவில்லை

'வேதம் படைக்கவும்
நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று
கும்மியடி
சாதம் படைக்கவுஞ்
செய்திடு வோந்தெய்வச்
சாதி படைக்கவுஞ்
செய்திடுவோம்'

என்று மேலும் பாடியுள்ளார்.

நளனுக்குத் தமையந்தியின் சிறப்பை விளக்கிய அன்னம், பின்வருமாறு அவளை விபரித்ததாகப் புகழேந்திப் புலவர் பாடியுள்ளார்.

'நாற்குணமு நாற்படையா
வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணி
முரசா—வேற்படையும்
வாளுமே கண்ணு வதன
மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.'

நாற்குணங்களே (தன்னைக் காக்கின்ற) சதுரங்க சேனைகளாயும், பஞ்சேந்திரியங்களே நன்னிலையில் நிறுத்தும் அறிவிற் சிறந்த மந்திரிகளாகவும், காலில் அணிந்திருக்கும் சிலம்புகளே பெருமை முதலியவற்றை வெளிப்படுத்தும் முரசு வாத்தியங்களாகவும், தன்னுடைய கண்களே எதிர்த்தவரை வருத்தும் வேலாயுதமாகவும், வாளாயுதமாகவும் ஒரு அரசனைப் போற்கொண்டு, முகமாகிய சந்திரவட்டக் குடைக்கீழ் ஆளுமே பெண்மை அரசு என்று மேற்கூறிய பாடலால் தெரியப்படுத்துகிறார்.

தற்காலத்தில் 'நாற்குணங்கள்' என்னவென்பதை விளங்கப்படுத்தக் கூடியவர்கள் இல்லை என்றே கூறலாம். அக்குணங்களைப் பெண்களும் மறந்துவிட்டார்கள்

பெண்குலம், மேலே புகழேந்தியின் அன்னம் தமயந்தியைப் பற்றிச் சொன்ன மாதிரியோ அல்லது கம்பர் தாடகையைப்பற்றிச்சொன்ன மாதிரியோ அரசாளவேண்டுமென்பதையும், மேலே சொல்லப்பட்ட மூன்றுபெண் பிரதமர்களில் ஒவ்வொருவரும் இவைகளில் எந்தெந்த மாதிரித் தங்கள் இராச்சிய பரிபாலனத்தை நடத்தினார்கள் என்பதையும் அறிவுடையோர் தாங்களே ஊகித்து அறிந்துகொள்வார்களாக.

# ஐ. தே. க. காரியக்கமிட்டி கூட்டம்

வேலணை, வெள்ளி

ஐக்கிய தேசியக் கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டம் அக்டோபர் மாதம் 8ம்திகதி காலை வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக ஐ. தே. கட்சிப்பொதுச் செயலாளர் திரு. விமல சேன காரியக்கமிட்டி உறுப்பினர்களுக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளார். (உ)

# மறு உலகைப்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை ஹாம்லத் நம்பாமல் மிக்க மனவருத்தத்துடன் இருந்தான். ஒரு நாள் அவனுடைய தந்தையின் ஆவி அரச உடுப்புக்களுடன் ஒரு இரவில்வந்து தான் பூந்தோட்டத்தில் உறங்கும்போது தன்னுடைய தம்பி காதில் நஞ்சை ஊற்றித் தன்னைக்கொன்ற விதத்தை எடுத்துக் கூறியதாக உலகப்புகழ் பெற்ற கவிஞர். வில்லியம் ஷேக்ஸ்பியர் தன் நாடகமான ஹாம்லத்தில் எழுதியுள்ளார்.

இத்தகைய செய்திகள் எல்லாம் மரணத்தின் பின்னும் மனிதன் உயிர் வாழ்கிறான் என்பதை மக்கள் தொன்று தொட்டே உணர்ந்துவந்திருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. ஆனால் மரணத்தின் பின் வாழ்பவர்களை அழைத்துப் பேசும்முறை பரவலாக அதிக அளவில் எப்போது உலகில் பரவியது என்பதை அடுத்த பகுதியில் பார்க்கலாம்.

# மகாத்மா......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது மனநிலையாக இருந்தது.

## காந்தியப் போராட்டங்கள்

காந்தியப் போராட்டங்கள், இறைவன் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக மறைமுகமாகப் போராடுகிறான் என்னும் தத்துவத்திலேயே கட்டி எழுப்பப் பட்டன. வரலாற்றைப் பொறுத்தமட்டிலும் ஒடுக்கப் பட்ட இனம் என்றும் ஒடுக்கப்பட்ட இனமாக இருந்ததில்லை என்பதைக் காணலாம். எனவே காந்தியின் கூட்டம்-கொள்கை உயிரென நினைக்கின்ற கூட்டம்-உரிமைக் கோயில் உள்ளே விடுதலை இறையோனை அடைய ஓடிய கூட்டம். அதன் விளைவு குண்டின்அடிபட்டார் சில தோழர்-கூட்டஞ் சிறையாடிற்று-தொண்டர் பலரங்கே தடியாலும் தாள்தூளானார். காவிய மார்பிடைக் குண்டுகள் ஒளிந்தன-களத்தே செவ்வானின் ஓவியம் வரைந்தது. காந்தியவாதிகளின் குங்குமக் குருதி நீரோட்டம். ஆயினும் அசையா நெஞ்சுடன் வெஞ்சிறையிலும் உண்ணா நோன்பெடுத்துப் போராடினார் அண்ணல் காந்தி. இறுதியில் சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் பேரரசு அகிம்சையின் முன் அஸ்தமித்தது அகிம்சை அடிப்படையில் நிகழ்ந்த முதலாவது போராட்டம் வெற்றி பெற்று பாரததேசம் சுதந்திரமடைந்தது.

# தமிழ் மொழிக்கு சமஉரிமை?

**கே. பி. ஹரன்**

**1957**-ம் வருடம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இலங்கையிலிருந்து சென்ற சில பத்திரிகைக்காரார்களுடன் லண்டன் சென்றிருந்தேன். பிரிட்டிஷ் பார்லிமென்ட் சபை கமிட்டி அறைகளில் ஒன்றில் எங்களுக்கு பகல் விருந்து அளித்தனர்

கன்சர்வெடிவ், லிபரல், தொழிற்கட்சி எம். பிக்களின் மூவரும் கலந்துகொண்டனர்.

கன்சர்வெடிவ் எம். பி. பேசுகையில், 'ஏண்டைபோட்டுத் தோற்றதால் நாங்கள் இலங்கைக்கு சுதந்திரம் அளிக்கவில்லை எங்கள் நல்லெண்ணத்தின் மீதே பிரிட்டிஷ், இலங்கை நட்புறவுகள் பலப்படவே நாங்கள் இலங்கைக்கு சுதந்திரம் அளித்தோம்.' என்ற கருத்துப்பட குறிப்பிட்டார் அவருக்கு பதிலளிக்கும்முகமாகப் பேசுகையில், ''உலக சரித்திரமே கண்டிராதமுறையில் இலங்கைக்கு பிரிட்டன் அரசியல் சுதந்திரம் அளித்தது. அந்த நன்றியை நாங்கள் என்றென்றும் மறக்கமுடியாது. ஆனால் பல நூற்றுண்டுகளாக அடிமைப்பட்டிருந்த ஒரு நாடு, விடுதலை அடைந்த புதிதில் சிற்சில தவறுகள் செய்யலாம். ஜனநாயகமுறை எங்களுக்குப் புதிது. ஆகவே நீங்கள் அடிக்கடி இலங்கை வந்து கண்காணித்து, தவறுகளைத் திருத்தித் தக்க யோசனைகளைக் கூறி உதவவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டோம். மூன்று கட்சி எம். பிக்களும் அதை ஆமோதிக்குமுறையில் புன்முறுவல்செய்தனர்.

நாம் சுதந்திரம் பெற்று சுமார் 30 ஆண்டுகள் ஆகின்றன. இக்காலகட்டத்தில் இலங்கையில் மட்டுமன்றி, இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகளிலும் அரசியல் தலைவர்கள் செய்த தவறுகள் அதிகம். இதனால் இம்மூன்று நாட்டு பொதுமக்களும் பட்டுள்ள பட்டுவரும் இன்னல்கள் கொஞ்சமல்ல.

இந்தியாவுக்கு விடுதலை அளிக்கு முன் பிரிட்டன் ஒரு நிபந்தனை போட்டது நாட்டை இரண்டாக்கவேண்டுமென்றும் முஸ்லீம்களைத் திருப்திசெய்தால்தான் சுதந்திரம் அளிக்க முடியுமென்றனர். மகாத்மா பிரிவினைக்கு ஒப்பவில்லை ஆனால் மற்ற தலைவர்கள் வேறு வழியின்றி பிரிவினைக்கு ஒப்புக்கொண்டனர் பாகிஸ்தானும் உதயமாயிற்று.

இலங்கைக்கு சுதந்திரம் அளிக்குமுன், சிறுபான்மைச் சமூகத்தவரான தமிழரின் பீதிகளைப் போக்கவேண்டும் என்றும். அரசியல் சட்டத்தில் 29-வது விதிப்படி பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றும் பிரிட்டன் கூறியது. சிங்களமும், தமிழும் அரசாங்க மொழிகளாக்கப்பட்டன நாட்டில் இரு சமூகங்களிடையேயும் ஒற்றுமையும் அமைதியும் நிலவியது. இரு மொழிகளும் 9-வருட காலம் உத்தியோக மொழிகளாக இருந்தன. 'அரசாங்கமொழிகள் திணைக்களம்' இயங்கி வந்தது. பின்னர் திடீரென சிங்களம் மட்டும் சட்டம் பலத்த எதிர்ப்பினிடையே நிறைவேறி, 'அரசாங்க மொழித் திணைக்களம்' என்று பெயர்ப்பலகை மாறி, நாட்டில் வகுப்புவாதம் தலைதூக்கி பல கலவரங்கள் ஏற்பட்டன.

என்றாலும் பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்த நிபந்தனை மீறப்பட்டும், அது ஏன் என்று கேட்க முன்வரவில்லை. இலங்கையும் இவ்விஷயமாக பிரிட்டனிடம் யோசனை கேட்கவில்லை. தவறுசெய்யவும் ஒரு சுதந்திரநாட்டுக்கு உரிமையுண்டல்லவா? சிறுபான்மை சமூகம், உரிமைகளை இழந்து திகைத்தது. மொழி உரிமை இழந்ததைப்பின்பற்றி படிப்படியாக வேறு உரிமைகளும் பறிபோனதால், தமிழர் மனமுடைந்தனர். 'தமிழ் ஈழ' கோரிக்கையும் தலைதூக்கியது. ஜனநாயகத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்தனர்

சமீப பொதுத்தேர்தலுக்குப் பின் நாட்டின்நிலைமையையும், சிறப்பாகத் தமிழரின் சங்கடங்களையும் விளக்கத் தேவையில்லை. தமிழரின் பிரச்னைகளை உணர்ந்த புதிய பிரதமர் அவற்றைத் தீர்க்கப்போவதாக அறிவித்தார். வட்டமேசை மகாநாடு கூட்டுவதாகச்சொன்னார் அரசாங்கத்துக்கு அதிக பெரும்பான்மைப்பலம் இருப்பதால, அதுவே, எவ்வித மகாநாடுமின்றி இப்பிரச்னைகளைத் தீர்க்கலாமென்று சுதந்திரக் கட்சியும் கூறியுள்ளது.

இதுவரை ''அரசாங்க மொழி'' என்றுகூறப்பட்டதை ''அரசாங்க மொழிகள்'' என்று கூறி, படிப்படியாக முன்பிருந்ததுபோலவே இருமொழிகளையும் அரசாங்க மொழிகளாக்க முயற்சிசெய்யப்படுவது போல் தெரிகிறது. தமிழ் மொழியை புறக்கணித்ததால் தான் நாடு முன்னேறமுடியவில்லை. அமைதி குலைந்தது. தேசிய ஒற்றுமை நீங்கியது. இந்த இமாலயத் தவறை உணர்ந்த புதிய அரசாங்கம், முன்போல் தமிழ்மொழிக்கு சம உரிமை அளிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து. அதற்கானநடவடிக்கை எடுக்க இனி காலந்தாழ்த்தாமல் முன்வருமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

## கொழும்புத்துறை அகதிகள்: மோசமான தொற்று நோய் இல்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் அகதிகள் தங்கியிருப்பதில் அங்குள்ள மாணவர்களுக்கு இடைஞ்சலாக இருக்குமானால் அகதிகளை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறேம். இருப்பிடங்கள், தொழில்கள் உடமைகள் எல்லாவற்றையும் இழந்து சொல்லொணு துன்பங்களை அனுபவித்து இப்பகுதி மக்களின் கருணையை நம்பிவந்திருக்கும் இந்த மக்களை மேலும் துன்பங்களுக்குள்ளாக்குவது உகந்ததல்ல. இம்மாதிரிசம்பவங்கள் எப்போதும் நடைபெறுபவையல்ல. அவர்களைக் கூடியவரையில் பாதுகாத்து அமைதியான வாழ்வுக்கு வசதிசெய்து கொடுப்பது நம் எல்லோரதும் கடமையாகும்''

இவ்வாறு கொழும்புத்துறை முகாமிலுள்ள அகதிகள் பராமரிப்புக்குப் பொறுப்பாக உள்ளவர்களில் ஒருவரான வண. ஆ. சிங்கராயர் கூறினர்.

கலாசாலை ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதைச் சுட்டுக்காட்டிய அவர், அகதிகளை வேறு இடத்துக்கு மாற்றும்போது வேறு இடங்களிலும் மக்கள்தான் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களும் அகதிகளினுல் ஏற்படும் சங்கடங்களைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டியிருக்கும் என்றும் சொன்னர்.

கொழும்புத்துறை அகதிகள் மத்தியில் சின்னமுத்து மாத்திரமே காணப்படுகின்றது என்றும் அதுவும் இன்னும் சில தினங்களில் மறைந்துவிடும் என்றும் கூறிய வண. சிங்கராயர், வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய் எதுவும் காணப்படவில்லையென்றும் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு கல்வி முக்கியம்தான். ஆனால் இன்றைய நிலையில் இங்கு வந்துள்ள அகதிகளின் பிரச்னைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றார்.

**WANTED**

Young two smart girls for a travel Agency in Jaffna to work as clerks. Must be fluent in English. Preference will be given to those who have got knowledge in accounts. Excelent salary. Good prospects. Previous experience will be considered favourably. Apply in own hand-writing on or before the 5th instant. Advt. No 7288 C/o Eelanadu Ltd, Jaffna 7288

**கல்வி**

G. C. E. (O/L) விஞ்ஞான, வர்த்தக, கலை விசேட வகுப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் விசேட பட்டதாரிகளாலும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை நேரங்களிலும் நடாத்தப்படும். ஆரம்ப திகதி 8-10-77. யாழ்ப்பாண கல்விநிலையம், 22, இராமையா செட்டியார் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7255

## இன்று நடக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் நிலைகுறித்து இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பிரதமரையும், கல்வியமைச்சின் உயர் அதிகாரிகளையும் சந்தித்ததன்பலனக ஏற்பட்ட பலாபலன்களை அறிவிப்பதற்கான பொதுக்கூட்டம் இன்று பகல் ஒரு மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்க தலைமையில் நடைபெறும். பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக தலைவர் டாக்டர் கே பாலசிங்கம் உரையாற்றுவார். (கெ)

## காந்தி ஜயந்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

மறுமலர்ச்சி மன்றத்தினரின மகாத்மா காந்தி ஜயந்திவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். பக்திப்பாடல்களும் கலந்துரையாடல்களும் இவ்விழாவில் நடைபெறும். (க)

**கடத்தல்...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் விமானத்திலிருந்து 1,200 யார் தூரத்தில் இந்த விசேஷ விமானம் நிற்கிறது. இந்த விமானத்தில் ஜப்பானிய அரசாங்க உயர் அதிகாரிகள அமைச்சர் ஆகியோர் உள்ளனர்.

கடத்தல்காரர்ருடன் இவர்கள் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர். ——

**கனடா**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின் சார்பில் பேசிய அதன் முக்கிய பிரமுகர் ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்டம் பற்றியும் அறிவிக்கப்பட்ட செய்திகள் பதிவு நாடாமூலம் ஒலிபரப்பப்பட்டன. தமிழ் மாணவர் இயக்கத்தின் சார்பில் பேசிய அதன் முக்கிய பிரமுகர் ஈழத்தமிழர்களின் இன்றையநிலைபரங்களை அரசியல் விஞ்ஞான விளக்கங்களுடன் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்தார். இந்திய தமிழர்கள் சார்பில்பேசிய முக்கிய பிரமுகர் ஈழத்தமிழர்கட்கு இன்னல் ஏற்பட்டால் அது தமக்கு ஏற்படுவதைப் போன்றதாகும் என்றும் அத்துடன் ஈழத தமிழர்களின விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியத் தமிழ் மக்களின் ஆதரவு நிச்சயம் உண்டு என்று பலத்த கைதட்டல்களுக்கு மத்தியில் கூறினர். தமிழர்கட்கு இழைக்கப்பட்ட அநீதிகுறித்து விசாரணைநடத்த நடுநிலைமையாளர் குழு ஒன்றை நியமிக்குமாறு சிறிலங்கா பிரதமருக்கு தந்தி அடிப்பதென கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஐ நா. பொதுச்செயலாளருக்கும், அமெரிக்க தலைவருக்கும், கனடா பிரதமருக்கும், ஐ நா. மனித உரிமைக் குழு, சர்வதேச நீதிச்சபை போன்ற பல்வேறு ஸ்தாபனங்களுடன் தொடர்புகொள்வதற்கென 7 பேர்கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இனக்கலவரத்தின்போது இந்தியாவில் எமக்கு ஆதரவாக உடன்நடவடிக்கை எடுத்த இந்திய பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தமிழ்நாடு முதல் மந்திரி திரு. எம் ஜி. ராமச்சந்திரன எதிர்க்கட்சி தலைவர் திரு. மு. கருணாநிதி, உலக தமிழர் இளைஞர் பேரவை தலைவர் திரு. ஜனார்த்தனம், பொன். சத்தியசீலன் போன்றவர்கட்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுமாறு இக்கூட்டம் தமிழ் ஈழ இயக்கத்தை பணித்தது.

மொன்றியல் (கியூபெக் மாகாணம்) எட்மண்டன் (அல்பேட்டா மாகாணம்) போன்ற இடங்களில் தமிழர்கட்கு ஆதரவான கூட்டங்கள் இதே தினத்தில் நடைபெற்றன.

## 'மாணவரில்லாபாடசாலைக்கு ஆசிரியர்கள் செல்வதா?'

யாழ்ப்பாணம், ஞாயிறு

''வன்செயல் சம்பவங்கள் நடைபெற்ற பகுதிகளிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு பிள்ளைகள் வராத காரணமாக ஆசிரியர்கள், வேலைக்குத் திரும்பவில்லை. மாணவர்கள் வருகையில்லாத பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைவேலைக்குச் செல்லுமாறு தூண்டுவது எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகும்.''

இலங்கை தேசிய ஆசிரிய சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் திரு. வ. கிருஷ்ண பிள்ளை வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்றம் குறித்து அரசு ஆராயவுள்ளதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் விசேடமாக ஆசிரியைகள் நாட்டில் எழுந்துள்ள சூழ்நிலைக்காரணங்களை விளக்கி உடனடியாக கல்வியமைச்சின் செயலாளருக்கு இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இம்மாற்ற விண்ணப்பப் பிரதியை எனக்கு அனுப்பிவைக்கவேண்டும் ஏற்கனவே எனக்கு அனுப்பிய பிரதியை இலங்கை ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் திரு. எல். ஆரியவன்சாவிற்கு அனுப்பிவைத்துள்ளேன்.'' (க)

**நாளைய**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக் கூட்டத்தில்' அரசியல் அமைப்பு மாவட்ட மந்திரிகள் பற்றி தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அலசி ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

நாளை காலை கொழும்பில் திரு. எம், சிவசிதம்பரம் இல்லத்தில் நடைபெறவிருக்கும் கூட்டணி நடவடிக்கைக் குழுவின் கிழக்குமாகாண உறுப்பினர்கள் கூட்டத்தில் இக் கருத்துக்கள் சமர்ப்பிக்கப்படும் என்றும் திரு ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அக் கூட்டத்திலும் தெரிவிக்கப்படும் கருத்துக்களையும் ஆராய்ந்தபின்னர், நாளை மாலை கூட்டணி பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் இறுதி முடிவுஎடுக்கப்படும் எனறும் திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

அரசியல் அமைப்புக்கு அரசு கொண்டுவரும் திருத்தத்தை ஆதரிப்பதா? அல்லது எதிர்ப்பதா? என்பது பற்றி பலவித கருத்துக்கள், நேற்று நடந்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. விவாதத்தில் கலந்துகொள்வதா இல்லையா? என்பது பற்றிய கருத்துக்களும் சமர்ப்பிக்கப்பட்டது. இது பற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. (க)

க்ஷயரோக

## கொடித்தினம் நடக்காது

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாட்டில் இடம்பெற்ற கலவரங்களினுல் தமிழ்மக்கள் பாதிப்புற்றிருப்பதனுல் இம்மாதம் 4ந் திகதி க்ஷயரோக கொடித்தினம் நடைபெறமாட்டாதென்று இலங்கைத் தேசிய க்ஷயரோக தடுப்புச் சபையின் யாழ்ப்பாணக்கிளை தீர்மானித்துள்ளது. இத்தகவலை கொழும்பு தலைமையகத்துக்கு, சங்கச்செயலாளர் திரு. டி. பி. சுந்தரம்பிள்ளை வெளியிட்டார்.

அதேசமயம் அகதிகள் புனர்வாழ்வுச்சபை இம்மாதம் 14ம் 15ம் திகதிகளில் நடத்தவிருக்கும் கொடிதினத்துக்கு சகல ஒத்துழைப்பை நல்குவதுடன் பயிற்சிபெற்ற 350 தொண்டர்களையும் நிதிசேகரிப்பதற்கு சபைவழங்குமென்றும் திரு டி. பி. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (கெ)

## மலிவும் நிறைகுறைவும்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். நகர எல்லைக்குள் திராட்சைப்பழ விற்பனையாளர்கள் தாம்சந்தைவிலையிலும் பார்க்க திராட்சைப்பழங்களை மலிவாக விற்பதாக மக்களை ஏமாற்றி மறுபுறம் நிறையைக் குறைத்துவிற்கின்றனர் பலர் விலை மலிவாக இருக்கிறதென வாங்கிச்சென்று வேறொரு இடத்தில் நிறுத்துப்பார்க்கும் போது கால் ருத்தல்வரை குறைய இருப்பதாக மக்கள் குறைப்படுகின்றனர். (கெ)

## ஊற்று நிறுவனம் நிதி திரட்டுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊற்றுநிறுவனம் அகதிகளுக்கான நிதி திரட்டும் டிக்கட் நிதியின் பணியை மிச்சைவற் சவரிக்கார நிறுவன அதிபர் திரு. க. கனகராசாவும், முகமதலி அப்துல்வலி நிறுவன அதிபர் ஜனப் நஜியுதீனும் முதலாவது டிக்கட்டை வாங்கி ஆரம்பித்துவைத்தார். (கெ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri lanka